பக்கங்கள்: 23

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை 08.01.2023 கதிர் 63

**இது ரகசியம் அல்ல!**

சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் நடந்த பொது தேர்தலின் போது யாழ் மாவட்டத்தில் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்து வேட்பாளர்களைக்கொண்ட வேட்பாளர் பட்டியலில் தலைமை வேட்பாளர் தமிழரசு கட்சியின்

☞2

### தமிழரசு மத்திய குழு நேற்று முடிவு:

# கூட்டமைப்பாகவே தேர்தலில் போட்டி!

## பிரிந்து களம் இறங்கினால் பயனுண்டா என்று பங்காளிக் கட்சிகளுடன் ஆராயவும் தீர்மானம்



(பழுவூரான்)

மட்டக்களப்பு,ஜனவரி 08

வரும் உள்ளூராட்சித் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் பங்காளிக் கட்சிகளுடன் சேர்ந்து எதிர்கொள்ள வேண்டும். வேறு பிற கட்சிகளைச் சேர்த்துக் கொள்வதில்லை. அதேசமயம் உள்ளூராட்சி சபைகளில் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிட்டால் அதிக ஆசனங்களை எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் அது குறித்து பங்காளி கட்சி தலைவர்களோடு ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்

இவ்வாறு நேற்று மட்டக்களப்பில் கூடிய இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு தீர்மானித்ததாக தெரியவந்தது

☞2

## வடக்கில் முதல் கட்டுப்பணம் வவுனியாவில் செலுத்தப்பட்டது



வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான முதலாவது கட்டுப்பணம் நேற்று மாலை செலுத்தப்பட்டது.

☞2

## தமிழர்களை ஏமாற்றுகிறார் சுமந்திரன் கஜேந்திரகுமார் காட்டத்துடன் கருத்து



ஜனாதிபதியுடனான சந்திப்பில் முன்னேற்றமில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்திரன் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பு நேற்று கொக்குவிலில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. அங்கு கருத்து தெரிவித்த

☞22

## வாழைப்பழச் சீப்பு சின்னத்தில் மைத்திரி குணரத்னவின் கட்சி

### யாழிலும் தனித்துக் களமிறங்குமாம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜன.08

ஐக்கியதேசியசுதந்திர முன்னணிஉள்ளூராட்சிசபைத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில்வாழைப்பழச்சீப்பு சின்னத்தில் தனித்துப் போட்டியிட தீர்மானித் துள்ளது.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின்

☞2

### மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

## உண்ணாவிரதப் போராட்டத்தை 38 இலங்கையரும் கைவிட்டனர்



இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 38 இலங்கையர்கள் உண் ணாவிரத போராட்டத்தை கைவிட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவுக்கு முகவர்களால் அழைத்துச்செல்லப்பட்ட

☞22

## நல்லூர் சிவன் ஆலய முன்றிலில் ஜனாதிபதி பங்குபற்றும் பொங்கல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.08

தேசியத் தைப்பொங்கல் விழாவிற்காக 15ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

15ஆம் திகதி மாலை 2 மணிக்கு நல்லூர் சிவன் ஆலய முன்றிலில் இந்தத் தேசியப் பொங்கல் விழாவை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலகம் முன்னெடுக்கின்றது.

மாலை 2 மணிக்கு இடம்பெறும் தேசிய பொங்கல் விழாவையடுத்து மாவட்டச் செயலகத்திலும் விசேட கூட்டம் இடம்பெறவுள்ளது.

☞2

# இலங்கைத் தமிழருக்கு இந்தியா துணை நிற்க வேண்டும் சென்னையில் சுமந்திரன் வெளிப்படையாகத் தெரிவிப்பு!




அரசமைப்பு ரீதியிலான தீர்வு திட்டத்தை நோக்கிய – இலங்கை அரசாங்கத்துடனான – பேச்சுகளில் ஆர்வத்துடன் கலந்துக்கொள்கிறோம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறைந்தது அந்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்துவதுடன், இதற்காக இந்தியாவின் ஒத்துழைப்பையும் கோருவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வெள்ளியன்று இந்தியா சென்றிருந்த விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் ஏற்பாட்டில் சென்னையில் இடம்பெற்ற நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஏ.என்.ஐ. செய்தி சேவைக்கு கருத்து வெளியிடும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

☞22

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரான மாவை சேனாதிராசா.

ஆனால் அவருக்கு மக்கள் அளித்த இடம் கூட்டமைப்பு பட்டியலில் ஆறாவது தான்.

மக்கள் மத்தியில் அந்த நிலைமை என்றால், அவர் தலைவர் பதவியை விட்டுக் கொடுக்காமல் இழுத்துப் பிடித்து வைத்திருக்கும் தமிழரசு கட்சியில் அவரின் நிலைமை அதை விட மோசமானது. நேற்று மட்டக்களப்பில் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அதனை அவர் நன்கு உணர்ந்து இருப்பார் என்று நம்பலாம்.

கூட்டத்தில் கலந்து கொண்ட சுமார் 35 பேரில் ஒருவரை தவிர – சட்டத்தரணி தவராஜாவைத் தவிர – வேறு எவருமே அவரின் பக்கத்தில் இல்லை என்பது அவருக்கு நேற்று நன்கு தெரிந்திருக்கும். புரிந்திருக்கும்.

சட்டத்தரணி தவராஜா நேற்றைய கூட்டத்தில் சட்டத்தரணி சுமந்திரனுடன் முரண்பட்ட விதமும், அதை அடுத்து அவர் நீண்ட நேரம் கருத்து வெளியிட்ட பாணியும், கட்சியினர் பலரினதும் முகத்தை சுளிக்க வைத்தன என்றனர் கூட்டத்தில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்கள் சிலர். அத்தகைய ஒருவர்தான் நேற்றுக் கூட்டத்தில் மாவையருக்கு பரிந்து குரல் எழுப்பினார்.

மற்றைய எல்லோரும் – வழக்கமாக மாவையுடன் தம்மை அடையாளப்படுத்துவோர் கூட – நேற்று மாவை பக்கமில்லை. கழன்று விட்டனர். எதிர்த்துக் கருத்து வெளியிட்டனர்.

“தமிழ் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட வேண்டும், ஐக்கிய முக்கியம்'' என்ற மாவையின் ஆரம்பப்பேச்சே சகலரினதும் கடுப்புக்கும் எதிர்ப்புக்கும் உள்ளானதால், அந்தக் கோரிக்கை அப்படியே அடிபட்டுப் போய்விட்டது.

ஏனைய தமிழ் தேசிய கட்சிகளையும் இணைத்து, பரந்துபட்ட கூட்டணியாகப் பொது சின்னத்தில் போட்டியிட வேண்டும், கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனை விதிக்குமாற் போல, புளொட் தலைவர் சித்தார்த்தனும், ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் தமக்கு எழுதிய கடிதத்தை, நேற்றைய கூட்டத்தில் மாவை சமர்ப்பிக்காமல் அமுக்கப் பார்த்தார். ஆரம்பத்திலேயே ‘ஐக்கிய முக்கியம்’ என்று அவர் பேச்செடுத்த போதே அதற்கு எதிராக உறுப்பினர்கள் பலரும் சீற்றத்துடன் கிளம்பியமையினால், நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து கொண்ட மாவையர், மேற்படி இரு பங்காளி கட்சி தலைவர்களும் அனுப்பிய கடிதம் குறித்து பேசாமல் அதனை அமுக்க முற்பட்டார்.

ஆனால் சி.வி.கே.சிவஞானம் விடவில்லை. தாமே மேற்படி கடித விவகாரத்தை மத்திய குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் அவர்.

இரண்டு கட்சித் தலைவர்களின் கோரிக்கைகளையும் அடியோடு நிராகரிப்பது என்ற சாரப்பட நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதியும் ரெலோ, புளொட்டின் அழுத்தத்தை – கோரிக்கையை – நிராகரிப்பது என்றும் மத்திய குழு நேற்று முடிவு செய்தது.

ரெலோவும், புளொட்டும் அதிகம் துள்ளி குதிப்பதால் இந்தத் தேர்தலில் அவற்றை வெளியில் விட்டுப் பிடிக்க வேண்டும் என்ற கருத்து நேற்று மத்திய குழுக் கூட்டத்தில் பெரும்பாலும் ஓங்கி இருந்தது. எனினும் மூத்த தலைவர்கள் சிலர் சமாளித்து கூட்டமைப்பாக தேர்தலை அணுகுவோம் என்ற முடிவை எடுத்துரைத்தனர்.

தேர்தலில் பிரதேச சபைகளை அப்படியே பங்காளி கட்சிகளுக்கு வார்க்கும் – ஒப்படைக்கும் – முறைமையை இம்முறை பின்பற்றக் கூடாது என்ற கருத்து பலராலும் நேற்று வலியுறுத்தப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. அதற்கு மத்தியில் கட்சியின் தேசிய மாநாட்டை உடனடியாகக் கூட்டுவது சாத்தியமில்லை என்று உணரப்பட்டமையினால் அது குறித்து நேற்று விவாதிக்கப்படாமல் விடயம் விடப்பட்டது.

அப்படியானால் என்ன? மாவையின் கட்சித் தலைமைக்கு இப்போது ஆபத்தில்லை என்பதுதானே அதன் அர்த்தம்?

உள்ளூராட்சி சபை தேர்தல் வேட்புமனு தாக்கலில் அவர் தமது கைவரிசையை வழமை போல காட்ட மீண்டும் ஒரு வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது. அதனால் கட்சிதான் உருப்படாமல் போகப் போகின்றது. அது வேற விடயம். அவ்வளவுதான்!

- மின்னல் -

## கூட்டமைப்பாகவே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று பகல் முழுவதும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில், மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் இல்லத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், சிரேஷ்ட உபதலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என சுமார் 35 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கூட்டத்தின் ஆரம்பத்தில் கட்சிக் கொடி தமிழரசுக்கட்சியின் தலைவரினால் ஏற்றப்பட்டதை தொடர்ந்து, இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் இராசமாணிக்கத்தின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அகவணக்கம் செலுத்தப்பட்டதனை தொடர்ந்து கட்சியின் மத்திய குழு கூட்டம் ஆரம்பமானது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக ஆராயப்பட்டதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான எம்.சுமந்திரன் இக்கூட்டத்தின் பின்னர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

அண்மையில் வவுனியாவில் அரசியல் குழுக் கூட்டம் நடைபெற்ற போது, பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அவை ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தன்.

இன்றைக்கு அமுலிலுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் ஒரு குறித்த கட்சி தனியாக அறுதிப் பெரும்பான்மை பெறுவது மிகக் கடினமான விடயமென்பது நாம் அனுபவத்தினூடாகக் கண்ட உண்மையாகும். ஏனென்றால் 60 சதவீதம் வட்டாரத்துக்கும், மீதி 40 சதவீதம் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துக்கும் என்று பிரிக்கின்ற போது, வட்டாரத்தில் முழுமையாக வெற்றி பெற்றாலும், அந்தச் சபைகளிலே அறுதிப் பெரும்பான்மை பெறுவது கஷ்டமாகக் காணப்படும். முழுமையாக வெற்றி பெற்றாலே 60 சதவீதம் கிடைக்கும். இந்நிலையில் ஒருசில வட்டாரங்களைத் தவற விட்டால், எஞ்சிய வட்டாரங்களினுடைய பிரதிநிதித்துவம் மட்டும்தான் கிடைக்கும். மற்ற 40 சதவீதத்தில் எந்தப் பிரதிநிதித்துவமும் கிடைக்காத நிலையே உருவாகும்.

இந்நிலையில் சில கட்சிகள் சுயேச்சைக் குழுக்களைத் தங்களோடு போட்டியிட வைத்து, அவர்கள் பெறும் சில நூறு வாக்குகளில் ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களை அந்தச் சபையில் பெற்றதன் காரணமாக அவர்கள் வட்டாரத்தில் வென்றவர்களோடு சேர்ந்து, ஆட்சியமைப்பதற்கு உபயோகமாக இருந்திருக்கிறது.

இவ்வாறான நிலையில் எமது கட்சியின் 8 மாவட்டக் கிளைகளிலிருந்தும் கருத்துக்கள் பெறப்பட்டன. இதில் மன்னார் மாவட்டக் கிளையிருந்து ஒரு பிரதிநிதியும் கலந்து கொள்ளாத நிலையில் அவர்களும் எழுத்து மூலமாகத் தமது மாவட்டக் கிளையின் தீர்மானத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்தக் தேர்தலை நாங்கள் எவ்வாறு எதிர்கொள்ளலாம் எனச் சென்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன்படி, தொழில்நுட்ப ரீதியாகத் தமிழ்த் தேசிய. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற மூன்று கட்சிகளும் தேர்தலில் பிரிந்து – தனித் தனியே போட்டியிட்டால், ஒரு கட்சி வட்டாரங்களை வென்றால், மற்றக் கட்சிகள் விகிதாசாரத்திலே ஆசனங்களைப் பெறக் கூடியதாக இருக்கும். ஆகவே ஒட்டுமொத்தமாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்தச் சபைகளை வெல்லக் கூடியதாக இருக்கும். இது,எண்கணித ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் நாம் கண்ட உண்மை.

இந்தத் தேர்தலிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயர் மற்றும் சின்னத்திலேதான் போட்டியிடுகிறது.

இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முன்வைக்கப்பட்ட யோசனை எதிர்வரும் 10 ஆம் திகதி தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஏனைய இரு கட்சிகளோடும் பேசும் போது முன்வைக்கப்படும்.

நாம் மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகத் தேர்லில் போட்டியிட்டுக் கூடுதலான ஆசனங்களைப் பெறுவதே சிறந்ததெனக் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. இது விடயத்தில் மற்றப் பங்காளிக் கட்சிகளோடும் பேசி இறுதி முடிவு எடுப்போம். அதற்கப்பால் குறுகிய காலம் இருப்பதன் காரணமாக நாங்கள் ஏற்கனவே எங்களுடைய வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு வட்டடாரத்துக்குமான உறுப்பினர்களை தெரிவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெறும்.

இந்நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி நாம் கூடிச் சந்திக்கும் போது எந்தத் தீர்வும் எட்டப்படவில்லையெனில், நாங்கள் தொடர்ச்சியாக இந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது குறித்து சில முடிவுகளை எடுக்க வேண்டியேற்படும். – என்றார்.

## வடக்கில் முதல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னனியின் வேட்பாளர்கள் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வி.சந்திரலிங்கம் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியிருந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள நிலையில் புதிதாக தரமுயர்த்தப்பட்ட வவுனியா மாநகரசபையில் போட்டியிடுவதற்காகவே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

## வாழைப்பழச் சீப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர், சட்டத்தரணி மைத்திரி குணரத்ன இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து கட்சி நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

அதன் பின்னராக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிலரே யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் செயற்பட்டனர். மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர். அந்த மாற்றத்தை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் உட்பட இலங்கை முழுவதும் தனித்துப் போட்டியிடவுள்ளோம். தேர்தல்களில் அடிப்படையான பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மாகாண சபை நாடாளுமன்றம் என நாம் தேர்தலில் போட்டியிடுவோம் – என்றார்.

## நல்லூர் சிவன் ஆலய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக் கூட்டத்தில் நில விடுவிடுவிப்புத் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இதேநேரம் ஜனாதிபதியின் வருகை முதல் அனைத்து பணிகள் தொடர்பான முன் ஆயத்தக் கூட்டம் நாளை மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir

# அமெரிக்கவின் சிறப்பு பிரதிநிதி இலங்கை வருகை தருகிறார்!




அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்தின் சிறப்பு பிரதிநிதி ஒருவர் எதிர்வரும் 10 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

தெற்காசிய பிராந்தியம் தொடர்பான அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர் சுமோனா குஹா என்ற அதிகாரியே இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இந்திய வம்சாவளியான இந்த பெண் அதிகாரி பாதுகாப்பு துறை சம்பந்தமான நிபுணர் என பேசப்படுகிறது. இலங்கை வரும் அமெரிக்காவின் சிறப்பு பிரதிநிதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் சுமோனா, அதன் பின்னர் இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளார். இதன் போது இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் காணப்படும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் விரிவான பேச்சுகளை நடத்தவுள்ளதாக தெரியவருகிறது.

இதனிடையே இந்திய அரசின் உயர் மட்ட அதிகாரிகள் பலர் இலங்கைக்கு விஜயம் செய்ததற்காக கடந்த சில தினங்களில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள பின்னணியில், ஜோ பைடனின் உயர் மட்ட பாதுகாப்பு பிரதிநிதி இலங்கைக்கு விஜயம் செய்வது முக்கியத்துவம் மிக்கது என பேசப்படுகிறது.




## வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் கவனவீர்ப்பு!

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

நேற்று (சனிக்கிழமை) முல்லைத்தீவு வள்ளிபுனம் மாலை நேர கல்வி நிலையத்திற்கு முன்பாக இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை இங்கு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்ததோடு ஜனாதிபதியுடன் இடம்பெறுகின்ற பேச்சுகளில் அனைத்து தமிழ் உரிமைக்காக பாடுபடும் கட்சிகளின் கருத்துக்களை உள்வாங்கி செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேவையற்ற சந்திப்பு

"உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிற்குள் எவ்வித பிளவுகளும் இல்லை. சில அரசியல் வட்டாரங்களில் அப்படித் தெரிவிக்கப்படுவதைப் போன்று எதுவும் இல்லை."

– இவ்வாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்திருக்கின்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆணைக்குழுவிற்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன எனவும், எனவே இது தொடர்பில் ஆலோசனைகளைப் பெறுவதற்கு சட்டமா அதிபரை நாடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்விடயம் குறித்துக் கேட்கப்பட்டபோதே ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா மேற்படி மறுத்துரைப்பை வெளியிட்டார்.

"அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுவதைப் போன்று தேர்தல் ஆணைக்குழுவிற்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. எடுக்கப்படும் சகல தீர்மானங்களும் உறுப்பினர்கள் ஐவரினதும் இணக்கப்பாட்டுக்கமையவே முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் ஐவரும் இணைந்தே முன்னெடுத்து வருகின்றோம். அதற்கமையவே வேட்புமனு தாக்கலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. ஐவரும் அதில் கையெழுத்திட்டுள்ளோம். வர்த்தமானியில் கையெழுத்திட்டதன் பின்னர் அதனை மீளப் பெறுவதாக எவரும் கூறப் போவதில்லை. அவ்வாறு கூறவும் முடியாது." – என்று கூறியுள்ளார் அவர்.

தேர்தல் ஆணையத்தின் ஐந்து ஆணையாளர்களுக்கும் இடையில் முரண்பாடு உள்ளது என்ற தகவலை நாட்டின் தலைவரான ஜனாதிபதியே வெளியிட்டார் எனக் கூறப்படுகின்றது.

அப்படித் தேர்தல் ஆணையாளர்களிடமே தாமே நேரில் கூறினார் என்ற தகவலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே ஊடகப் பிரதானிகள் சிலரை நேற்று முன்தினம் சந்தித்தபோது குறிப்பிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டு அது முன்னெடுக்கப்படும் சமயத்தில், இப்படி ஜனாதிபதியைச் சந்திப்பதற்கும் விளக்கம் கூறுவதற்கும் தேர்தல் ஆணையம் சென்றமை தவறான நடவடிக்கை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேரடியாகக் குற்றம் சுமத்தி இருக்கின்றது.

அப்படிச் சந்திக்கச் சென்றமையால்தான் இப்படி விபரீதமான விமர்சனங்களை தேர்தல் ஆணையம் எதிர்கொள்ள வேண்டி வந்திருக்கின்றது என்பது உண்மை.

# தகவலறியும் உரிமை சட்டம் குறித்த பயிற்சிச் செயலமர்வு மட்டக்களப்பில்!



தகவல் அறியும் உரிமை சட்டமூலம் எமது உரிமைகளை பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் பயிற்சி செயலமர்வு ஒன்று மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது தகவல் உரிமை சட்டம் தொடர்பிலும், அந்த சட்டத்தைப் பயன்படுத்துபவர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் மற்றும் பொது மக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எவ்வாறு தகவல் அறியும் உரிமை சட்டம் பயன்படுகிறது என்பது தொடர்பிலும் மிகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக எமது உரிமைகளைப் பாதுகாப்போம் எனும் தலைப்பில் நடைபெற்ற பயிற்சி பட்டறையில் தகவல் அறியும் சட்டம், இலங்கை பிரஜைகள் அனைவருக்கும் பொதுவானது. ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்பினருக்கும் சட்டத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முகமாகவே இந்தச் செயலமர்வு இடம் பெற்றது.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் நடத்தப்பட்ட இந்த பயிற்சி செயலமர்வில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, ஆணைக் குழுவின் ஆணையாளர்களான சட்டத்தரணி கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தன, சட்டத்தரணி ஜகத் லியன ஆராய்ச்சி, முஹம்மட் நஜியா, மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி குமார் லோபேஸ், விடிவெள்ளிப் பத்திரிகையின் ஆசிரியர் முகமத் பைரூஸ், பத்திரிகை ஸ்தாபனத்தின் தகவல் அறியும் உரிமை சட்ட திட்ட உதவியாளர் ஆர்த்தி ரவிவர்மன், உள்ளிட்ட பலர் இதன் போது கலந்து கொண்டு கருத்துக்களையும் தகவல்களையும் தெரிவித்திருந்தனர்.

# 13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும்!

## வலியுறுத்துகிறார் டக்ளஸ் தேவானந்தா



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

முதற்கட்டமாக ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம், நிர்வாக ஏற்பாடுகளினூடாக காலத்துக்குக் காலம் இல்லாமல் செய்யப்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு மீளக் கையளிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும் காணி விடுவிப்பு மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவை நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கான முயற்சிகளாக இருக்க வேண்டும் எனவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அரசியல் அபிலாஷைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதிக்கும் தமிழ் தரப்புகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக இடம் பெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் விவகாரங்களைத் தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவின் பிரதிநிதி மற்றும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர் என்ற வகையில், ஜனாதிபதியின் கலந்துரையாடல்களில் இரட்டை வகிபாகத்தைக் கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஈடேற்ற முடியும் எனவும் கூறியுள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்டத்திலும் தேர்தலில் வீணையில் களம் இறங்குமாம் ஈ.பி.டி.பி.!

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வீணை சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தீர்மானித்துள்ளது.ஈ.பி.டி.பி. கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும், கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி. கட்சியின் ஊடகச் செயலாளரும், கிழக்கு பிராந்திய அமைப்பாளருமான ஸ்ராலினின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், மட்டக்களப்பு மாவட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையிலான வேலைத் திட்டத்துடன் செயற்பட முன்வருகின்ற பல்வேறு தரப்புக்களையும் இணைத்து கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir




# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2023 ஆம் ஆண்டு மே நடத்த திட்டம்

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தகவல்

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2023ஆம் ஆண்டு மே மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இதேவேளை பரீட்சைக்கான திகதி கல்வி அமைச் சின் இறுதி அனுமதியை அடுத்து அறிவிக்கப்ப டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடந்த ஆண்டு மது விற்பனை 50 சதவீதம் குறைந்துள்ளது!

வரி அதிகரிப்பு மற்றும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக கடந்த வருடம் மதுபான விற்பனை 50 வீதத்தால் குறைந் துள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள் ளது.

இதனை மதுவரித் திணைக்களத்தின் பேச்சா ளரும், வருமான நடவடிக்கை பிரிவின் மேலதிக ஆணையாளருமான கபில குமாரசிங்க தெரிவித் துள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான மது வருமானம் 140 பில்லியன் ரூபாயாக இருந்த நிலையில், கடந்த வருட வருமானம் 170 பில்லியன் ரூபாவாக அதி கரித்துள்ளது.

# உள்ளூராட்சி தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது மணிவண்ணன் தலைமையில் கலந்துரையாடல்!

யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையிலான அணியினர் உள்ளூராட்சி சபை தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். சேர் பொன். இராம நாதன் வீதியில் உள்ள அலுவலகத்தில் இந்தக் கலந்துரை யாடல் இடம்பெற்றிருந்தது. இதன்போது உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அந்தக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் எனப் பல ரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









Main Sponsor

SARITA Textorium Right Place for Right Choice | TAIAN LANKA STEEL COMPANY (PVT) LTD. | ANDRA WEDDING CARDS

Official Jewellery Partner: JOY GLORIOUS (Pvt) Ltd Your Family Shop

Official Saree Blouse Partners: THE BEADS Aari Studio | NAVAJOTHI HAND CRAFT

Official Florist Partner: CROWN THE WEDDING CROWN

Official Photography Partner: SAD's PHOTOGRAPHY

Official Media Partners: வீரகேசரி VIRAKESARI ONLINE | தமிழ் 99.5 99.7

# அருந்ததி வழங்கும் மாற்று மோதிரம் கொழும்பு 2023

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிடத்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

அதிலும் அருந்ததியின் மாற்றுமோதிரம் என்றாலே எதிர்பார்ப்பு சற்று அதிகம் தான். காரணம் பெண் முயற்சியாளர்களை கௌரவிக்கும் அரங்காகவும் அவர்களின் திறமைக்கு அங்கீகாரம் வழங்கும் மேடையாகவும் அருந்ததியின் மாற்று மோதிரம் நிகழ்வு அமைகின்றது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து கேக் வடிவமைப்பாளர்களும், ஆரி வேர்க் வடிவமைப்பாளர்களும் பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் அனுசரணையாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

**மாற்று மோதிரம்**
**10th January 2023**
**Galadari Hotel**
**மாலை 4.00 மணிமுதல்**

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மாற்றுமோதிரம் மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..



Since 2014

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25470 | வே | 1965**
கொழும்பு | இந்து | PD
Accountant | கனடா
சித்திரை (கன்னி)
180 செ.மீ

**25481 | வே | 1976**
சுதுமலை | இந்து | PD
Consultant Physician
ரேவதி (மீனம்) | Separated
168 செ.மீ | செவ்: 01 | UK

**25468 | வே | 1976**
உரும்பிராய் | இந்து | MD
Tech. Exp. Research
Engineer | பூரட்டாதி (கும்பம்)
167 செ.மீ | Divorced | கனடா

**25483 | வே | 1979**
கரம்பொன் | இந்து | B.E
Engineer | USA
பூசம் (கடகம்)
179 செ.மீ

**25465 | நா | 1996**
கொழும்பு | RC | MBA
Freight Forwarding
Officer | பூராடம் (தனுசு)
167 செ.மீ

**25492 | மு | 1988**
கொழும்பு | இந்து | PHD
Researcher / Scientist
உத்தராடம் (தனுசு) | USA
170 செ.மீ

**25497 | வே | 1988**
அல்லைப்பிட்டி | இந்து | Higher
Diploma | Floor Manager
திருவாதிரை (மிதுனம்) | Aus
168 செ.மீ | செவ்: 01

**25435 | முத | 1989**
கொழும்பு | இந்து | B.Eng
Software Architect
திருவோணம் (மகரம்)
188 செ.மீ

**25479 | வே | 1989**
செம்பியன்பட்டு | இந்து
NDT | Technical Officer
ஆய்யிலியம் (கடகம்)
170 செ.மீ

**25508 | கரை | 1990**
வல்வெட்டித்துறை | இந்து
MA | Sr. Medical Coder
ரோகிணி (ரிஷபம்)
165 செ.மீ | செவ்: 02

**25447 | வே | 1990**
கைதடி | இந்து | Reading
BD | Bank Staff
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ | செவ்: 01

**25484 | செ.மு | 1990**
கல்வியங்காடு | இந்து
BSc | Land Surveyor
கார்த்திகை (ரிஷபம்)
175 செ.மீ | செவ்: 04

**25371 | வே | 1991**
மட்டக்களப்பு | இந்து | BD &
ME | Team Leader
பூரட்டாதி (கும்பம்)
155 செ.மீ

**25476 | கு | 1992**
திருகோணமலை | இந்து
BSC | Technical Lead
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ | செவ்: 12

**25443 | வே | 1992**
கொக்குவில் | இந்து | BD
Assistant Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**25475 | வே | 1992**
யாழ் நகர் | இந்து
Bsc | Civil Engineer
பரணி (மேடம்)
170 செ.மீ | Singapore

**25440 | வி | 1992**
ஊர்காவற்துறை | இந்து
PD | Tax Officer
உத்திரட்டாதி (மீனம்)
160 செ.மீ | செவ்: 04

**25489 | வே | 1993**
கோப்பாய் | இந்து
Bsc | Lecturer
சித்திரை (கன்னி)
183 செ.மீ | செவ்: 02

**25446 | வே | 1993**
வண்ணார்பண்ணை | இந்து
M. Eng | Fluid Dynamic
Engineer | UK | பூரம்
(சிம்மம்) | 179 செ.மீ

**25511 | வி | 1993**
கொழும்பு | இந்து | BSc
Software Engineer
சதயம் (கும்பம்)
169 செ.மீ | Singapore

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25433 | வே | 1987**
வண்ணார்பண்ணை | இந்து
BD | Teacher
அத்தம் (கன்னி)
168 செ.மீ | செவ்: 12

**25469மு | வே | 1988**
வண்ணார்பண்ணை | இந்து
MBBS | Doctor | UK
பூரம் (சிம்மம்)
173 செ.மீ

**25394 | வே | 1997**
நவாலி | இந்து | Diploma
Trainee Acc. Assistant
திருவோணம் (மகரம்)
152 செ.மீ | செவ்: 01

**25451 | வே | 1994**
வண்ணார்பண்ணை | இந்து
BD | Student
உத்தரம் (கன்னி)
157 செ.மீ

**25472 | கு | 1993**
யாழ்நகர் | RC | MBBS
Doctor, MD | கனடா
158 செ.மீ

**22945 | வே | 1988**
யாழ்நகர் | இந்து
CIMA | Job Seeker
கேட்டை (விருச்சிகம்)
167 செ.மீ | செவ்: 04

**25436 | கோ | 1993**
பருத்தித்துறை | இந்து | PD
Medical Doctor
சுவாதி துலாம் (துலாம்)
159 செ.மீ

**25441 | வே | 1989**
மாவிட்டபுரம் | இந்து | BA
Teacher | Norway
மூலம் (தனுசு)
144 செ.மீ | Divorced

**25397 | சோ.வே | 1996**
கொழும்பு | இந்து
BSc | Internal Auditor
ஆயிலியம் (கடகம்)
164 செ.மீ

**25474 | ந | 1995**
நெல்லியடி | இந்து | B.Com
Software Developer
பரணி (மேடம்)
170 செ.மீ | செவ்: 04

**25343 | வே | 1994**
சங்கானை | இந்து
PD | Student
ரேவதி (மீனம்)
157 செ.மீ | செவ்: 02

**25437 | கோ | 1994**
பருத்தித்துறை | இந்து
BSc | Research Assistant
சதயம் (கும்பம்)
159 செ.மீ | செவ்: 08

**25472மு | கு | 1993**
கொழும்பு | RC | MBBS
Doctor | Canada
161 செ.மீ

**25509 | ஏர | 1998**
கொழும்பு | இந்து
BSc | QA Engineer
அஸ்வினி (மேடம்)
150 செ.மீ

**25464 | வே+கோ | 1996**
நீர்வேலி | இந்து | BFA
Job Seeker
திருவோணம் (மகரம்)
173 செ.மீ

**25357 | கோ | 1995**
செங்கலடி | இந்து | MD
IT Support Engineer
பூரட்டாதி (கும்பம்)
152 செ.மீ | செவ்: 08

**25409 | வே | 1995**
கோப்பாய் | இந்து
BSc | Internship
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

**25510 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து
BSc | Cardiographer
பூரட்டாதி (மீனம்)
163 செ.மீ | செவ்: 04

**25431 | நா | 1993**
கொழும்பு | இந்து
BA | Jr,Analyst
மிருகசீரிடம் (மேடம்)
164 செ.மீ | செவ்: 04

**25515 | வே | 1997**
காரைநகர் | இந்து | BSc
Associate Soft. Engineer
சதயம் (கும்பம்)
158 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 08th of January 2023**

**We welcome students' articles in word for publication**
-Editor-
kalaikkathiredu@gmail.com


## *Read the following passage and Answer: the question that follows.*

Character is destiny. Character is that on which the destiny of a nation is built. One cannot have a great nation with men of small character. We must have young men and women who look upon others as the living image of themselves as our Shastras have so often declared. But whether in public life or student life, we cannot reach great heights, if we are lacking in character. We cannot climb the mountain when the ground at our feet is crumbling.

When the very basis of our structure is shaky how can we reach the heights we have set before ourselves? We must all have humility. Here is a country in which we are all interested in building up for whatever service we take up, we should not care for what we receive. We should know how much we can put into that service. That should be the principle that should animate our young men and women. Ours is a great country, we have had for centuries a great history. The whole of the East reflects our culture.

***Answer the following questions based on the reading passage.***

1. What is the passage about?

........................................................................................................

2. What kind of young men and women must we have?

........................................................................................................

3. How can we reach the great heights we have set before ourselves?

........................................................................................................

4. Why is ours a great country?

........................................................................................................

5. Find the synonyms for the words/phrases from the above passage.

(a) break a fall apart into small fragments

(b) the quality of a modest view

***Answer:***

1. This passage deals with the importance of character formation in moulding the destiny of our nation.
2. We must have young men and women who look upon others as the living images of themselves as our Shastras have so often declared.
3. We can reach the great heights we have set before ourselves if our character is built on a strong foundation of sterling qualities.
4. Ours is a great country with a history that goes back for centuries. Its rich cultural heritage makes it unique. It has also contributed a great deal to the world of knowledge and culture.
5. (a) crumbling (b) humility

---

There is something disarming about Maria Sharapova, something at odds with her ready smile and glamor ous attire. And that something in her lifted her on Monday, 22 August 2005 to the world number one position in women's tennis. All this happened in almost no time. Poised beyond her years, the Siberian born teenager took just four years as a professional to reach the pinnacle. However, the rapid ascent in a fiercely competitive world began nine years before with a level of sacrifice few children would be prepared to endure.

Little Maria had not yet celebrated her tenth birthday when she was packed off to train in the United States. That trip to Florida with her father Yuri launched her on the path to success and stardom. But it also required a heart wrenching two–year separation from her mother Yelena. The latter was compelled to stay back in Siberia because of visa restrictions. The nine–year–old girl had already learnt an important lesson in life–that tennis excellence would only come at a price.

"I used to be so lonely," Maria Sharapova recalls. "I missed my mother terribly. My father was working as much as he could to keep my tennis–training going. So, he couldn't see me either". "Because I was so young, I used to go to bed at 8 p.m. The other tennis pupils would come in at 11 p.m. and wake me up and order me to tidy up the room and clean it." "Instead of letting that depress me, I became more quietly determined and mentally tough. I learnt how to take care of myself.

I never thought of quitting because I knew what I wanted. When you come from nothing and you have nothing, then it makes you very hungry and determined… I would have put up with much more humiliation and insults than that to steadfastly pursue my dream."

***Answer the following questions based on the reading passage.***

1. How many year did Sharapova take to reach the pinnacle as a professional?

........................................................................................................

2. Whom did Maria Sharapova miss terribly? Why?

........................................................................................................



3. What penalty did Maria Sharapova have to pay, being younger than the other players?

........................................................................................................

4. What qualities of Maria Sharapova would you like to see inculcated by every sportsman in the competitive world of sports?

........................................................................................................

***Answer:***

1. Sharapova took just four years to reach the pinnacle.
2. Sharapova missed her mother Yelena terribly as she could not accompany her during her training phase in the United States due to visa restrictions.
3. Being younger than the other players, Maria Sharapova had to face humiliation and insults from the senior players in the form of cleaning the rooms.
4. Every sportsman must inculcate certain qualities in order to reach the pinnacle of success. He must be very brave and tough as there is cut-throat competition. He must be hungry for success and must possess the 3 Ds – dedication, determination and devotion. And last but not the least must have a 'never say die' attitude.

**"konwledge isn't free. You have to pay attention"**

Nicholas Chorier is not your usual photographer. He is a kite aerial photographer. He uses a kite to hoist his camera into the skies and clicks photographs while the camera dangles precariously mid–air. As a teenager, Nicholas had two passions – photography and kite flying. During a trip to India to make a photo report on kite making, he learnt about this unique style of photography. Fascinated, he literally tied his two hobbies together for a living. Nicholas learnt to make strong kites modelled on the Japanese kites, Rokkaku that could endure harsh winds. A novice in his chosen field, he then set out to train himself.

Today he is one of the most well–known kite aerial photographers in the world. The technique is to tie a cradle containing the photogra phy equipment to the string of the kite and then fly it, thus launching the camera into air. From the ground, Nicholas manipulates the angles of the camera with a remote. An air–to–ground video link enables him to see the view from the kite's vantage point. Once satisfied with the frame, he clicks a picture. However, the job does have its pitfalls too.

Once, his kite disappeared in the Yamuna river, with his expensive camera in tow. He is especially fond of India, having made a couple of trips and taken many spectacular photos. "India is too vast and beautiful a country to be captured through the lenses in one life" he says. He recently released a book, Kite's Eye View: India between Earth and Sky. Though it includes photographs of off taken sites like the Taj Mahal, it shows them from a totally different perspective.

***Answer the following questions based on the reading passage.***

1. What were Nicholas's two passions?

.............................................................................................................

2. How does Nicholas take aerial photographs?

.............................................................................................................

3. What is 'Rokkaku"?

.............................................................................................................

4. (a) India is too vast a country to be captured through the lenses. (Remove too ……. and rewrite)

.............................................................................................................

(b) Nicholas learnt to make strong kites. (Rewrite using past perfect tenses)

.............................................................................................................

5. What risks do aerial photographers face?

.............................................................................................................

***Answer:***

1. Nicholas's two passions are photography and kite flying.
2. Nicholas takes aerial photographs by tying a cradle containing the camera to the string of a kite and flying it, manipulating the angles of the camera with a remote and uses air to ground video link to see the view and then clicks the picture.
3. Rokkaku is a Japanese kite that could endure harsh winds.
4. (a) India is so vast a country that it cannot be captured through the lenses.
(b) Nicholas had learnt to make strong kites.
5. The risk of losing their expensive camera or other photographic equipments is faced by aerial photographers.

---

Maria Montessori was born in Chiaravalle, in Italy on 31st August 1870. In spite of discouragement from all quarters, Maria became the first woman medical graduate from the University of Rome. In those days women were not enrolled at medical colleges. After her medical education she was made in charge of an Institute for mentally retarded children. In those days people believed that mentally retarded should not learn anything. So, no one taught them anything even simple things like attending to their needs and changing their dresses.

During her work in the institution, Maria observed these children very carefully and saw that these children seemed to find out for themselves about many things. They would reach out for anything they found, turn it around, see its shape, etc. She concluded that, given proper training and attention, these children could be taught to take care of basic needs and also some of them could pass the reading and writing test as ordinary children. Maria taught the children to distinguish between colours, sound, smells and tastes. She made frames with button holes and buttons to teach children how to tie shoe laces.

Her methods worked well and soon the children were able to do many things on their own. Maria thought that her method could be extended to be useful to ordinary children too. So, Maria opened the first school in the slums of Rome for children between three and six years. She called her school" Casa Di Bambini (Italian for "Children's House"). She applied her medical and psychological knowledge and experience for proper training of normal children.

She noted that when a child is really interested in the exercise he had chosen, he would become completely absorbed and could not be distracted. The child, thus, learnt from actually what it was doing. Dr. Maria found that children were ready for different tasks at different stages and that they needed the right exercise at the right state. A Montessori teacher's job was not to tell children what to do but to recognise in what state the child was and to guide him.

Also, children should be free to move about. They should not be pinned to their seats. Children became self–reliant and independent with this method. The children were not given any punishment in a Montessori School because even if a child behaved badly at first, when he became engrossed in the activity of his choice, he would be quiet and settle down. Maria believed that all human beings passed through certain set stages of psychological development. Differences were mainly because of the opportunities offered by the environment in which they were brought up as a child.

***Answer the following questions based on the reading passage.***

1. Where was Maria Montessori born?(Choose the correct answer and rewrite it)

.............................................................................................................

2. Where did Maria open the first school for normal children?

3. What does "Casa Di Bambini" mean in the passage?

.............................................................................................................

4. When is a child completely absorbed in learning things, according to Maria?

.............................................................................................................

5. How did her method of teaching become effective on children?

.............................................................................................................

6. Why are the children not given punishment?

.............................................................................................................

***Answer:***

1. Maria Montessori was born in Chiaravalle, in Italy.
2. Maria opened the first school for normal children in the slums of Rome.
3. "Casa Di Bambini" in the passage means Children's House
4. A child is completely absorbed in learning things when it is really interested in the exercise it had chosen.
5. Her method of teaching made children become self–reliant and independent. 6. The children are not given punishment because even if they behaved badly at first, when they became engrossed in the activity of their choice, they would be quiet and settle down.

# Promoting Human Rights - Good Governance, the Rule of Law and Democracy

Whereas recognition of the inherent dignity and of the equal and inalienable rights of all members of the human family is the foundation of freedom, justice and peace in the world

**Universal Declaration of Human Rights**

There is no doubt that nurturing good governance is essential to ensuring respect for human rights. Without the rule of law, independent courts and other institutions of the modern society - essential components of good governance - the promise of human rights may remain just that: a promise unfulfilled. Enforcement of fundamental freedoms when it matters may be impossible. The lesson of history is that transparent, responsible, accountable and participatory governance is a prerequisite to enduring respect for human dignity and the defence of human rights.

**The Hon Justice M Kirby**

The theme of this conference concerns human rights. As an introduction to that theme, this paper outlines recent activities intended to foster the promotion and enjoyment of human rights internationally and, more particularly, in the Pacific region and then addresses several current issues. The judiciary has not been included in many of these activities, even though its role is crucial in the recognition, protection and enjoyment of human rights.

It would be a fascinating philosophical exercise to go back in time to ascertain the genesis of the notions of democracy, human rights and the rule of law. Modern attempts to understand their interrelationship seem to throw up a "chicken and egg" debate. I propose to bypass that debate and simply start from the proposition that each stands separately but is related to, and dependent upon, the others. A moment's reflection shows that the quality and enjoyment of each builds on the strength of the other two.

## The Origins of International Human Rights

The establishment of the United Nations (UN) in 1945 ushered in a new period of respect for human rights. Its Charter does not, however, contain a comprehensive Bill of Rights.

Instead, contemporary human rights law is based upon the Universal Declaration of Human Rights (UDHR), which was drafted by the Commission on Human Rights (CHR) in 1947, and adopted by the General Assembly of the United Nations on 10 December, 1948.

The UDHR sets out, in succinct terms, the fundamental rights and freedoms that all human beings, regardless of race, colour, sex, language, religion, political or other opinion, ethnicity and national background are entitled to enjoy. In one form or another, these rights have been recognised for centuries but it was not until the creation of the Universal Declaration that they were comprehensively codified with the support and agreement of the international community.

These rights are not just a construct based on Western ideals. They have deep roots in the traditions of all peoples. The drafters of the Declaration drew upon the principles enshrined in national laws and constitutions. They referred not only to common law systems of justice but also to civil law countries and socialist systems. They did so in order to make certain its universal application.

The rights enshrined in the UDHR have been further articulated in subsequent conventions. In 1966, the International Covenant on Civil and Political Rights (ICCPR) and the International Covenant on Economic, Social and Cultural Rights (ICESCR) were adopted by the General Assembly. Together, the Declaration, conventions and their optional protocols constitute an International Bill of Rights.

Other major human rights treaties dealing with specific subject matters have also been enacted. They include the Convention on the Elimination of all Forms of Racial Discrimination (CERD) Convention on the Elimination of all Forms of Discrimination against Women (CEDAW) the Convention Against Torture and other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment (CAT) the Convention on the Rights of the Child (CROC) and the International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of their Families (MWC). Conventions addressing the rights of Indigenous peoples and disabled persons are in the process of being negotiated.

Schedule 1 of this paper summarises the substantive provisions of the seven core international human rights treaties. Schedule 2 shows which Pacific States have ratified them. Ratifications by France are also shown. Pacific Island States have a very low record of ratification of these treaties. Nevertheless, all states are subject to customary international law. There are differing views whether all of the rights embodied in the UDHR have, through their widespread and consistent international acknowledgement, become part of customary international law. Nevertheless, it is now generally accepted that some rules, at least, have become custom; namely, the prohibitions against slavery, torture, arbitrary detention, and systematic racial discrimination. Consequently, these prohibitions are binding on all states, regardless of whether they have ratified the specific treaties mentioned above.

Whilst States are bound in international law by the treaties they have signed and by international custom, human rights so recognised do not become part of the domestic law of some States, including common law countries, until those States have enacted them into domestic law. Of course, this is not necessary if human rights are already enshrined in the State's Constitution. Schedule 3 summarises the fundamental rights and freedoms that are constitutionally entrenched in Pacific Island States.

Many principles in the International Bill of Rights reflect the meaning and content of the notions of the rule of law and democracy. The rule of law is expressed in the provisions which assert that all are equal before the law and are entitled, without discrimination, to the equal protection of the law. It is also embodied by the principle that no one shall be subjected to arbitrary interference with their rights and freedoms. Democratic principles are inherent in the right to self-determination, the right of freedom of peaceful assembly and association and the right to take part in the government of the country directly or through freely chosen representatives.

## UN Human Rights Regime

Each major human rights treaty contains a supervisory mechanism, according to which States are required to lodge periodic "country reports". The reports describe the legislative, administrative and judicial measures taken by the State to comply with its obligations under the convention. These reports are considered by "Treaty Bodies", which are committees established pursuant to the provisions of the treaty for the purpose of monitoring state compliance. Reports issued by Treaty Bodies are, at times, critical of a State. If a State is found to have neglected its responsibilities, the Treaty Body will make recommendations to help that State remedy the deficit.

The functional commissions of the UN have also established a number of mechanisms to assist the promotion and protection of human rights. These are referred to as "special procedures". They include periodic debates before the CHR on country situations and the appointment of thematic rapporteurs and working groups. The special procedures recognise that "domestic" human rights issues are now legitimate matters for international scrutiny.

Optional protocols to the ICCPR, ICERD, CEDAW and CAT provide a mechanism for individuals to lodge complaints, known as "communications", with the Treaty Body, alleging a violation of their rights under the Convention. These communications are carefully considered by the relevant treaty body and result in the publication of a "Finding". There is no machinery to enforce a Finding if it is adverse to a State. Instead, the system relies upon the State being prepared to act on the Finding and any recommendation therein.

There are also human rights regimes, with supervisory mechanisms, in certain regions around the world. The UN divides the world into four geographic zones: the Africas, the Americas, Europe and the Asia Pacific region - the latter being all States east of Europe and west of the Americas (from Palestine to the American west coast). Each region, other than the Asia Pacific, has a human rights body to which complaints of non-compliance may be made by individuals against the State.

The point has now been reached where international law and the international community have established wide-ranging human rights standards which touch upon most aspects of government and human endeavour.

However, the stark reality is that established norms are not being implemented in many parts of the world and are not enjoyed by the members of many minority ethnic and social groups.

Human rights only have meaning when they can be enjoyed in a practical sense. This was emphasised by the present High Commissioner for Human Rights, Madame Louise Arbour, who observed in her Opening Address at the 61st Session of the CHR that the UN has spent the last 60 years establishing human rights norms and the time has now come to concentrate on their implementation.

The Secretary-General has tried to reform the United Nations in order to achieve this goal. In his first reform program in 1997, human rights were integrated into the work of the whole organisation. His second reform program called for stronger links between international standards, international human rights machinery and UN activities undertaken at the country level. He encouraged more attention to human rights protection work while, at the same time, maintaining the UN's traditional commitment to human rights promotion, capacity and infrastructure building. To this end, the Office of the High Commissioner for Human Rights (OHCHR) co-convened a major international seminar in September 2004 with the United Nations Development Programme (UNDP) focusing on practical measures to ensure effective implementation of good governance practices for the promotion of human rights at the national level. The seminar was attended by 138 people from 73 countries. In a statement summarising the outcome of the seminar, the Chairman, Mr Lee Sun-jin, observed:

Good governance needs to aim for justice. While the element of the rule of law is extremely important as part of good governance for the promotion of human rights, that element should not merely imply respect for the national law but rather for law which is consistent with the international human rights framework, with channels to promote justice.

The Seoul Seminar on Good Governance was followed by an International Roundtable of National Human Rights Institutions (NHRIs) in Suva, Fiji on 13-15 December 2004. The Roundtable was convened to consider the role of NHRIs in ensuring good governance and the promotion and protection of human rights. It was organised by OHCHR and hosted by the Fijian Human Rights Commission. Although it was an international roundtable, it is significant that OHCHR chose to hold it in the Pacific.

## National Human Rights Institutions

Both the Secretary-General of the UN and the High Commissioner for Human Rights have said that NHRIs are one of the principle vehicles for the promotion and protection of human rights.

To be an accredited NHRI, an organisation must comply with the "Paris Principles". The key minimum criteria are:

Independence guaranteed by the national constitution or by statute;

Autonomy from the government

Pluralism, including in its membership

# Promoting Human Rights ....

A broad mandate based on universal human rights standards;

Adequate powers of investigation, without authorisation from higher authority;

Sufficient resources to maintain an adequate infrastructure and to carry out its mandate; and

Members that are appointed by an official act, for a specified period.

The accreditation process is carried out by the International Co-ordinating Committee of National Institutions (ICC). This body meets annually.

**An accredited NHRI will have the power:**

To make recommendations and proposals to the government on human rights aspects of existing and proposed laws;

To report on specific violations of human rights and the national human rights situation in general; and

To receive, investigate and report on complaints from individuals. Most NHRIs also have power either to commence litigation to enforce human rights or to intervene in litigation involving significant human rights issues.

It must be recognised that NHRIs are not the only form of national human rights mechanism. Such mechanisms may come in various shapes and sizes and may be established under the Parliament, Executive or Judiciary. They may have mandates of varying widths and enjoy differing degrees of independence from government. Besides a NHRI, there could be a national advisory commission on human rights, a national anti-discrimination commission, or an ombudsman. Generally, however, these mechanisms have more retricted mandates than a NHRI. This topic is taken up later in this paper.

The importance of NHRIs in the UN system has recently been emphasised by the Secretary-General. In a report published in March 2005, he recommended that NHRIs be given greater participatory rights in the CHR. At the 61st Meeting of the CHR, the member States resolved to permit accredited NHRIs to speak under all agenda items. They also supported NHRI engagement in all the subsidiary bodies of the Commission.

At present, there are three NHRIs in the Pacific: Australia, Fiji and New Zealand. These NHRIs are members of a regional organisation, the Asia Pacific Forum of National Human Rights Institutions (APF). The APF was founded in 1996 to provide practical support, technical assistance and co-operation to NHRIs, civil society and governments. There are presently 15 members of the APF, comprising 12 full members and 3 associate members. The APF has an independent, very active Secretariat with substantial funding and an Advisory Commission of Jurists.

The establishment of an NHRI is a matter for the legislature of each State and the structure of a particular institution will reflect that State's constitution, local laws and judicial and administrative system.

Many States have established a NHRI in order to comply with their obligations under international conventions to provide effective remedies for human rights violations. The Australian Human Rights and Equal Opportunity Commission (HREOC) was established for this purpose.

**Regional Activities for the Promotion and Protection of Human Rights in the Pacific**

Interest in the promotion and protection of human rights in the Pacific region is not new. LawAsia undertook a major project in the late 1980s to encourage the Pacific States to agree to adopt a Pacific Charter of Human Rights. The Human Rights Committee of LawAsia held a conference on the question in Fiji in April 1985, following which a drafting committee was convened. The work of the drafting committee was reviewed and considered at seminars conducted by LawAsia in 1987, 1989 and 1990. The outcome was a draft model treaty based on the African Charter of Human and Peoples' Rights which established the African Commission on Human and Peoples' Rights. The proposed treaty recognised wide-ranging rights, including all basic civil and political rights (most of which are already contained in the constitutions of the Pacific States), as well as economic, social and cultural rights, and the rights of peoples including Indigenous peoples. The draft also included sets of duties for the government and individuals as members of society. Finally, the draft proposed a Pacific Human Rights Commission which would supervise the Charter and deal with complaints about human rights violations. The treaty has not been adopted by the Pacific States. However, as I will mention later in this paper, it has recently been raised again for discussion.

In the conclusions of the UN's 12th Annual Workshop on Regional Framework for the Promotion and Protection of Human Rights in the Asia Pacific Region, the Governments of the region recognised:

"..both the financial and human constraints faced by the Pacific Island States in their efforts to promote and protect human rights and call[ed] upon the OHCHR to provide technical assistance, capacity building and training, also through the posting of a sub-regional representative in Fiji, to Pacific Island Governments and to support the Pacific Island States which have not yet done so to consider establishing a National Human Rights Institution".

The Pacific Islands Forum (PIF) has also repeatedly expressed a strong commitment to achieving regional co-operation on human rights and good governance.

At their annual meeting in 2003, the Pacific Islands Forum leaders agreed to carry out a review of the Forum and its Secretariat. An Eminent Persons' Group was established to review the forum. It was tasked with providing a fresh mandate and vision for the Pacific Islands Forum and an improved capacity within the Forum to enable it to provide leadership on regional co-operation and integration.

In its report delivered to a Special Leaders' Retreat in April 2004, the Eminent Persons' Group recommended that:

The forum should report the work of members in developing national human rights machinery. As part of this process, those leaders whose governments are not already engaged with the Asia Pacific Human Rights Forum [sic - APF], might consider becoming so. This would draw in practical assistance from the Office of the UN High Commissioner for Human Rights. In April 2004, the Forum Leaders adopted the "Auckland Declaration", in which they endorsed the recommendations of the Eminent Persons' Group, including the recommendation regarding the establishment of human rights machinery and noted that this may be done in consultation with the APF.

On 1-3rd June 2004, a "Pacific Island Human Rights Consultation" (the 2004 Suva Consultation) was held in Suva, Fiji. This Consultation was organised by the OHCHR, APF, UNDP and the Commonwealth Secretariat and was hosted by the Fijian Human Rights Commission. Participants in the Consultation included representatives of the Governments of Fiji, Kiribati, Nauru, New Zealand, Palau, Papua New Guinea, Tonga, Vanuatu and Australia. Representatives of non-governmental organisations also attended from 16 States, as well as representatives from OHCHR, UNDP, UNICEF, UNESCO, the Pacific Islands Forum Secretariat, the Commonwealth Secretariat and the NHRIs of Australia, Fiji and New Zealand. There were over 80 participants in all. In the Concluding Statement the participants reaffirmed that:

the primary focus for the promotion and protection of human rights is at the national level and therefore it is the primary responsibility of States to ensure that human rights are promoted, protected and fulfilled.

To that end the participants welcomed the decision of the Pacific Island Leaders to encourage the development of national human rights machinery with the possible engagement of the APF and the support of the OHCHR and other UN agencies. In the course of the Consultation, many participants stressed the importance of understanding the Pacific as a region distinct from Asia. Participants expressed the view that customary law should not take precedence over international human rights law but that human rights programs and rights-based interventions must be delivered in a culturally appropriate manner. The participants recommended that for each real or perceived conflict between culture and rights, careful analysis, wide consultation and an inclusive national decision-making process should be undertaken.

The Concluding Statement also noted the crucial need for an OHCHR presence in the Pacific. It requested the appointment of an OHCHR human rights adviser to provide full-time technical co-operation and needs assessment, as well as to assist Pacific States to address and provide effective responses to human rights problems.

Since the 2004 Suva Consultation, the OHCHR has taken steps to establish a sub-regional office in Fiji. The selection process for the representative has concluded and it is anticipated that the office will open in mid-2005.

As a follow up to the recommendations of the Eminent Persons' Group, the Pacific Islands Forum Secretariat, in co-operation with the APF, held a Regional Workshop on National Human Rights Mechanisms in Nadi, Fiji, on 28 February - 1 March 2005 (the 2005 Nadi Workshop). The Justice and Foreign Affairs Ministries were to be the principle participants. There were representatives of 13 of the Forum States, though not always at Ministerial level and, in addition, there were representatives of the office of the UNHCHR, the UNDP and other UN agencies, along with representatives from regional NGO's working in the human rights field. The Outcome Statement records that the workshop identified a range of challenges facing Forum countries in the promotion and protection of human rights. These include:

Limited "ownership" and awareness of human rights within both governments and communities due, in part, to a lack of understanding of the relevance of human rights (including economic, social and cultural rights) to the daily lives of the people of the region;

Multiple priorities of government competing for scarce resources, including economic and social development and environmental concerns, exacerbated by frequent changes in government;

A lack of economic, technical, institutional human resources and capacity to pursue human rights at the national level;

Obstacles presented by the region's isolation and the difficulty of governments in accessing international assistance;

The variety of models of good governance and the machinery of government in Pacific nations;

A lack of quality information on the benefits of becoming a party to international human rights conventions;

The heavy treaty based reporting obligations on governments; and

The need to reconcile human rights with traditional customary rights.

The workshop recognised that the primary responsibility for promoting, protecting and monitoring human rights at the national level lies with national governments. It also identified a number of issues that need to be considered by governments if they are planning to establish national human rights machinery including:

The possibility of using human rights legislation to set out detailed protections;

The importance of establishing new human rights institutions while, at the same time, strengthening existing governmental and non-governmental mechanisms which play a role in human rights;

The significant role played by civil society in promoting, protecting and monitoring human rights;

The need to build a culture of human rights through all levels of society; and

The desirability of extending regional human rights training programs to all Forum island countries

The Outcome Statement is notable for its failure to make any express reference to the pivotal role of the judiciary and the legal profession which supports it. It is respectfully suggested that this is a serious omission. The judiciary and the legal profession fulfil important roles in standard setting, in detecting and remedying human rights violations and in promoting understanding about the content and importance of human rights and about the community's responsibility to respect them.

The judiciary and the legal profession must be active in these matters and must engage with the good governance debate which is occurring.





# மின்னல் எப்படி உருவாகிறது தெரியுமா?



மழைக் காலங்களில், மிரளவைக்கும் இடிமுழக்கங்களுடனும், கண்ணைப் பறிக்கும் பளிச்சிடும் ஒளியுடனும் மின்னல் (Lightning) தோன்றுவதைப் பார்க்கிறோம். சரி! அது எப்படி உருவாகிறது என்று தெரியுமா?

கடல் நீர் மற்றும் பூமியின் மேற்பரப்பில் உள்ள மற்ற பிற நீர் நிலைகளில் / மூலங்களில் உள்ள நீர், சூரிய வெப்பத்தால் ஆவியாகி மேலே சென்று மழை மேகமாகிறது என்று நாம் படித்திருக்கிறோம்! பூமியின் மேற்பரப்பில் உள்ள வெப்பத்தால், அதன் மேலேயுள்ள காற்று சூடாகிறது. வெப்பக்காற்றுடன் நீராவி கலந்த சூடான ஈரக்காற்று, மென்மேலும் உயரத்தில் செல்கிறது. பல ஆயிரக்கணக்கான அடி உயரத்தில், வளிமண்டலத்தின் வெப்ப நிலை, நீரின் உறைநிலை வெப்பத்திற்குக் கீழ் (அதாவது, 0 டிகிரி செல்சியஸுக்குக் குறைவாக) இருக்கும். அங்கு சென்ற, ஈரக்காற்றில் உள்ள நீர்த்திவலைகள், உறைந்து பனிப்படிகங்களாக மாறி மழை மேகமாக உருவாகிறது. இவ்வாறு சூடான ஈரக்காற்று தொடர்ந்து மேலே செல்வதால், மேகத்தின் அளவும் தொடர்ந்து பெரிதாகிறது.

பனிக்கட்டிகள் லேசாக இருப்பதால், அவை மேகங்களின் மேற்பகுதியில் மிதந்து கொண்டிருக்கும். மேகத்தின் கீழ்ப்பகுதியில் மிதமான வெப்பம் இருக்கும் நிலையில், உறையாத நிலையில், நீர்த்துளிகள் இருக்கும். மேலும் நீர்த்துளிகள், பனிக்கட்டிகளை விட கனமானவை.

வளிமண்டலத்தில் ஏற்படும் சீரற்ற காற்றுக் கொந்தளிப்பினால் (Turbu lence) அதி வேகமாக இடம் பெயரும் நீர்த்துளிகளும் பனிக் கட்டிகளும் ஒன்றுடனொன்று மோதிக்கொள்கின்றன. இந்நிகழ்வின் போது மின்னூட்டம் பெற்ற நிலை மின் துகள்கள் (Static Electric Charges) தூண்டப்படுகின்றன. இதை விளக்க, உதாரணமாக, ஒரு எளிமையான சோதனை நிலை மின்னேற்றம் / மின்னிறக்கம் (உதாரணம்)

உதாரணமாக, ஒரு பலூனை ஊதி, உலர்வாக உள்ள நம் தலைமுடியில் சில நொடிகள் தேய்த்து விட்டு மெதுவாக எடுக்கும்போது, தலைமுடி பலூனுடன் ஒட்டிக் கொண்டு மேலெழும்பும். இதற்குக் காரணம், பலூன் தலைமுடியுடன் உராயும்போது, அவையிரண்டும் எதிரெதிர் மின்னூட்டம் (நேர் / எதிர்) பெறுகின்றன.



அதாவது மின்னேற்றம் (Electric Charging) நடைபெறும். பலூனுக்கு எதிரான மின் னுட்டத்தை தலைமுடி பெறும்போது எதிரெதிர் மின்னூட்டங்கள் ஈர்க்கப்படு வதால், முடி பலூனுடன் ஒட்டி மேலெழும்புகிறது. இவ்வாறாக மின்னேற்றம் பெற்ற ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கு நிலை மின்சாரம் பாய்வதை மின்னிறக்கம் (Electric Discharging) என்கிறோம். .

### இடி / மின்னல்

சரி! மீண்டும் மேகத்தின் மின்னேற்றத்திற்கு வருவோம்! ஒரு பொம்மையில் உள்ள சிறிய AA மின்கலத்தின் (AA Battery) இரு முனைகளில் + மற்றும் - என்று குறியிடப்பட்டு இருப்பதைக் காணலாம். அதுபோல, நேர் மின்னூட்டம் (+) மற்றும் எதிர் மின்னூட்டம் (-) பெற்ற இரண்டு விதமான மின் துகள்கள் முறையே, மேகத்தின் மேல் மற்றும் கீழ் பகுதிகளில் உருவாகின்றன. இவ்வாறு மிகப் பெரிய அளவில் மின்னூட்டம் பெற்ற துகள்கள் தூண்டப்பட்டு மேகத்தில் மிக வலிமையான மின் ஆற்றல் (Electric Energy) தேக்கப்படுகிறது.

மேகத்தின் அடிப்பகுதியில் இருக்கும் மின்னூட்டதிற்கு எதிர் வகையான மின்னூட்டம், நிலப்பரப்பின் மேல் உருவாகும் நிலையில், (அதாவது நேர் மின்னூட்டம்), மேகத்தில் தேக்கப்பட்டுள்ள மின்னாற்றலால், மேகத்திற்கும், நிலப் பரப்பிற்கும் இடையே ஒரு வலிமையான அதி உயர் மின்னழுத்த வேறுபாடு (Electric Potential Difference) ஏற்படும். இந்த மின்னழுத்தம் ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டும் போது, மேகத்திற்கும் நிலப்பரப்பிற்கும் இடையே மிக வலிமையான அதி உயர் மின்சாரம் கடத்தப்படுகிறது.

இவ்வாறு மேகத்திலிருந்து சீறிப் பாயும் மின்னோட்டத்தால் இரண்டு நிகழ்வுகள் நடைபெறுகின்றன; மிக அதி உயர் மின்னோட்டத்தால் வளிமண்டலத்தில் உள்ள காற்றின் மூலக்கூறுகள் ஒன்றுடனொன்று மிக வேகமாக மோதிக் கொள்ளும்போது, ஒளியும் வெப்பமும் வெளிப்படுகின்றன.

மின்னல்: மேகத்தின் கீழ்பகுதியில் குவிந்துள்ள எதிர் மின்னூட்டத் துகள்கள், நேர் மின்னூட்டம் பெற்ற நிலப்பகுதிக்கு மின்னிறக்கம் செய்யப்படுகின்றன. அப்போது அயனியாக்கம் (Ionization) செய்யப்பட்ட வாயுக்களின் பாதையில், முந்திக்கொண்டு முதலில் வெளிப்படும் வலிமையான முதன்மை ஒளி வெட்டு, நிலத்தை அடைந்ததும், மின்னோட்டம் நிலத்திலிருந்து மேலே மேகத்தை நோக்கித் திரும்பிச் செல்லும். இதனால் கண்ணைப் பறிப்பது போல் ஏற்படும் பளிச்சிடும் ஒளிதான், நாம் பார்க்கும் மின்னல் ஒளி! அப்போது வெளிப்படும் ஆற்றல் ஏறத்தாழ நூறு கோடி ஜூல்கள் (Joules) இருக்கும்! முதன்மை மின்னல் வெட்டு வெளிவரும் போது அதனுடன் பல கிளைகளாக பலப் பல மின்னல் கீற்றுகள் சீரற்ற பல விதமான பாதைகளில் பிரிந்து செல்லும்.



இடி: இப்படி அதி உயர் மின்சாரம் பாயும்போது வெளிப்படும் வெப்பத்தால் (அதாவது ஏறத்தாழ 50,000 டிகிரி ஃபாரன்ஹீட் சூரியனின் மேற்பரப்பில் உள்ள வெப்பநிலையைவிட அதிகம்.), வளிமண்டலத்தில் உள்ள காற்று சூடாகி விரிவடைகிறது. அப்போது ஏற்படும் ஒலிதான் நாம் கேட்கும் இடி முழக்கம்!

மேகத்திலிருந்து நிலத்திற்கு மின்னிறக்கம் நடைபெறுவது போல், எதிரெதிர் மின்னூட்டம் கொண்ட மேகங்களுக்கு இடையிலும் மின்னோட்டம் பாய்ந்து இடியுடன் கூடிய மின்னல் உண்டாகிறது.

## கல்விக்கதிர்

\- அகரன் -

# நொறுக்குத் தீனி பொட்டலங்களில் அடைக்கப்பட்டிருக்கும் வாயு



நொறுக்குத் தீனி பொட்டலங்கள் (எ.கா. - உருளைக் கிழங்கு சீவல்கள் - Potato Chips) வாங்கும்போது, அப்பொட்டலங்களில் காற்று நிரம்பியிருப்பதை உணரமுடியும். அதில் என்ன வாயு அடைக்கப்பட்டிருக்கிறது? ஏன் அப்படி வாயு நிரப்பப்பட்டுள்ளது?

சரியாக பாதுகாக்கப்படாத அல்லது திறந்த கொள்கலன்களில் உள்ள உருளைக்கிழங்கு சீவல்கள், போன்ற எண்ணெயால் பொரிக்கப்பட்ட நொறுக்குத் தீனிகள், நாளடைவில் கெட்டுப் போய் அதன் சுவை மற்றும் மணம் மாறிவிடக்கூடும்.

இதற்குக் காரணம், எண்ணெயால் பொரிக்கப்பட்ட உணவுகளில் உள்ள எண்ணெய் மற்றும் கொழுப்புப் பொருள்கள், காற்றில் உள்ள ஒட்சிசனுடன் வேதிவினை புரிந்து ஒட்சியேற்றமடைகின்றன. இதற்கு ஆங்கிலத்தில் ரான்சிடிட்டி (Rancidity) என்று பெயர்.

இவ்வாறு தீனிகள் கெட்டுப்போகாமல் இருக்க, தயாரிப்பு நிறுவனங்கள், தீனிகள் அடைக்கப்பட்ட பொட்டலங்களில் நைட்ரஜன் வாயுவை நிரப்புகின்றன.

இதனால், பொட்டலத்தில் உள்ள தீனிகள் ஒட்சிசனுடன் வினைபுரிவது தடுக்கப்படுகிறது.

இதன் மூலம், உணவுப்பொருள்கள் நீண்ட நாட்களுக்குக் கெடாமல், சுவை மற்றும் மணம் மாறாமல் அப்படியே இருக்கின்றன.

# கண்ணாடிப் பொருள்கள் எதிலிருந்து, எப்படி உருவாக்கப்படுகின்றன தெரியுமா?



எங்கும் எதிலும் நாம் பயன்படுத்தும் கண்ணாடிப் பொருட்கள் எதிலிருந்து உருவாக்கப்படுகின்றன? எப்படி உருவாக்கப்படுகின்றன?

கண்ணாடிப் பொருட்கள் மணலிலிருந்து உருவாக்கப்படுகின்றன! ஆம்! கடற்கரைகளிலும், ஆற்றுப்படுகைகளிலும், மற்றும் பிற பகுதிகளிலும் காணப்படும் மணலிலிருந்து கண்ணாடியை உருவாக்கலாம். வியப்பாக இருக்கிறதா?

சரி! இது எப்படி முடியும்? மணலை அதிவெப்ப நிலைக்குச் சூடாக்கி, உருக்கி, பாகு போன்ற நீர்ம நிலைக்குக் கொண்டுவந்து, பின்பு அதிலிருந்து பல வடிவங்களை வார்க்கிறார்கள் அல்லது வடிவமைக்கிறார்கள்.

1700 செல்சியஸ் (அதாவது 3090 லி ஃபாரன்ஹீட்) வெப்பநிலைக்கு மணலைச் சூடுபடுத்தினால், அது திட நிலையிலிருந்து உருகி பாகு போன்ற திரவ நிலையை அடைகிறது.

மணலை (சிலிக்கா) உருக்கும்போது அதனுடன் சோடா சாம்பல் (Soda Ash – சோடியம் கார்பனேட்) மற்றும் சுண்ணாம்புக்கல் (Limestone – கல்சியம் கார்பனேட்) சேர்க்கப்படுகின்றன. இதில் சோடா சாம்பல் சேர்ப்பதற்குக் காரணம், அது மணல் விரைவில் உருக வழி வகுக்கிறது. ஆனால், சோடா சாம்பல் சேர்ப்பதால், அது கண்ணாடியை நீரில் கரையும் தன்மையுடையதாக மாற்றிவிடும். இதைத் தடுக்கவே இரண்டாவது வேதிப்பொருளான சுண்ணாம்புக்கல் சேர்க்கப்படுகிறது. முடிவில் நமக்கு சோடா-சுண்ணாம்பு-சிலிக்கா கண்ணாடி கிடைக்கிறது.

பாகு போன்று உருகி, நீர்ம நிலையில் உள்ள மணலை வார்ப்புகளில் இட்டு அல்லது, குழாய்களைக் கொண்டு பலூன் போல் ஊதி, தேவைக்கேற்ப பல்வேறு வடிவங்கள் கொண்ட கண்ணாடிப் பொருட்கள், கொள்கலன்கள், சாளரத்தகடுகள் போன்றவற்றை உருவாக்குகின்றனர்.

வெவ்வேறு வகையான பயன்பாடுகளுக்கு ஏற்ப, வேறுபட்ட தயாரிப்பு முறைகள், பிற வேதிக்கூட்டுப் பொருட்களின் கலவைகளைக் கொண்டு பலவகையான கண்ணாடிப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன.

கண்ணாடிகளாலான கட்டடங்கள், கண்ணாடிக் கதவுகள், சமையலறைப் பொருட்கள், ஊர்திகளில் பயன்படும் கண்ணாடிகள், தொலைக்காட்சித் திரைகள், கணிப்பொறி மற்றும் அலைபேசித் திரைகள், மூக்குக் கண்ணாடிகள், முகம் பார்க்கும் கண்ணாடிகள், மிகக் கடினமான பல அடுக்கு கண்ணாடித் தகடுகள் போன்றவை அனைத்தும் இப்படித்தான் மணலிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.



காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# அழாதே பிறையே

நீ தேய்வதனாலேயோ
உன்னிலும் குறையென்று
ஊர் வாய்க்கு இரையானாய்
பாரிருள் அகற்றும்
அற்புத ஒளி ஈந்தும்
நற் சொல்லுரைக்கா
நய வஞ்சக உலகிது
உலகோரை திருப்திப்படுத்த
ஒருபோதும் எண்ணாதே
உன் ஆயுளும் போதாது
உணர்ந்தால் நயமே
உன் மனத் திருப்திக்கு
வாழ்ந்தாற் போதுமடி
வளர்வதும் தேய்வதும்
வாழ்வின் விதியென்று
மனதால் மகிழ்ந்திரு
துவண்டு போகாதே..
முழு நிலவின் அழகையும்
அரைநிலவின் அழகையும்
இரசித்திடும் உள்ளங்கள்
இருந்து கொண்டு தான்
இருக்கின்றன
பிறையே நீ அழாதே
பிதற்றல்கள் கண்டு.

குகதா

# தேடாப் பொழுதுகள்

காலாறிப்போய்
இருக்கிறோம் கடற்கரையில்

இரு துண்டங்களை
விளிம்புகளாய்
கொண்டதோர் கிண்ணம்
நீ ஊற்றுகிறாய்

நிரம்புதல்
பானத்துக்காயும்
ததும்புதல்
வானதுக்காயுமானது

நிலவு
கிளம்பவில்லை

நானோ 'ஐஸ் கட்டிகள்'
நிரம்பாத பானங்களை
தொடவே அறியாதவன்

ஒரு 'தேவாதியின்'
சொல்லைப்போல
சட்டென்று கிளம்பி
உன் கோப்பையில்
வீழ்கிறது நிலா


ஏனெனில் நீ அன்று
ஒரு பக்தையின்
பிரம்மை அல்லது
வேகமற்ற நதி
ஒன்றின் ஓடை நெகிழ்ச்சி

இன்னும் என்ன
இப்போது உன் கிண்ணத்தில்
'ஐஸ்' துண்டாய் நிலவு

ஒரு சித்தனென
எனை நிறைக்கிறது
உன் பானம்

லலித்தா

# கலைக் கதிர்



# தமிழ் இலக்கியங்களில் 'திணை' என்பது

## இலக்கிய நயம்



தமிழ் இலக்கியங்களில் 'திணை' என்பது ஒழுக்கமாகும். மனம் ஒன்றுபட்ட தலைவனும் தலைவியும் ஒன்றுகூடி தாம் அனுபவித்த இன்பம் இப்படிப்பட்டது என்று பிறருக்குச் சொல்ல முடியாததாய் மனத்தினுள், அதாவது அகத்தினுள் அனுபவிக்கும் உணர்ச்சியே அகத்திணையாகும்!

காதல் குறித்து அகத்திணைப் பாடல்களில் எண்ணற்ற உவமைகள் கொட்டிக்கிடக்கின்றன. சில பாடல்களை எழுதிய புலவர்களின் பெயர்கள் தெரியாவிட்டாலும், அவர்கள் எழுதிய உவமைகளால் பேர் பெற்ற புலவர்களும் சங்க இலக்கியத்தில் இருக்கின்றனர்.

சில அகத்திணை உவமைகள் சங்ககால மக்களின் காதல் வாழ்க்கையை நமக்கு கண்முன் காட்டுவதாக அமையும்.

1) ஐந்திணை ஐம்பதின் ஒரு உவமை, மெய்யான காதல் வாழ்வு வாழும் கணவனும்,மனைவியும் எவ்வாறு விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்று நமக்கு உணர்த்துகிறது.

'சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்டிக் – கலைமாத்தன்
கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.
என்கிறார் மாறன் பொறையனார்.'

–( ஐந்திணை ஐம்பது)

பாலை நிலத்தில் காதல் மிகுந்த ஆண் மானும்,பெண் மானும் ஓடிக்களைத்து தாகம் தீர்க்க நீர்வேண்டி, அங்குமிங்கும் அலைகின்றன. ஒரு சுனையில் ஒரு மான் அருந்துவதற்கு மட்டுமே சிறிதளவு நீர் உள்ளது. இந்நிலையில், பெண்மான் நீர் அருந்தட்டும் என்ற உயரிய நோக்கோடு ஆண்மான், தான் நீரைப்பருகுவது போல் பாவனை செய்தது. அதே போல் பெண்மானும் நீரைப் பருகாமல் ஆண் மான் அருந்தட்டும் என்று நீர் அருந்துவது போல் பாவனை செய்தது. சுனையின் நீர் தீரவே இல்லை. தங்கள் காதலினை அந்த இரு மான்களும் வெளிப்படுத்திய விதத்தை நமக்கு இவ்வாறு உணர்த்துகிறது ஐந்திணை ஐம்பது.

இதன்மூலம் காதல் வாழ்விலும், இல்லற வாழ்விலும் கணவனும் மனைவியும் எவ்வாறு தாமாக விட்டுக்கொடுத்து காதலுடன் வாழவேண்டும் என்று மனிதனுக்கு அஃறிணை உயிர்கள் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2) காதலனைப் பிரிந்து வருந்தும் காதலியைத் தோழி தேற்றும் முறையை குறுந்தொகை, யானைகளின் காதலோடு ஒப்பிட்டு அழகாக விளக்குகிறது.

'நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே.'

–குறுந்தொகை

'பயணம் சென்ற எனது காதலர் என்னை மறந்து போய்விட்டால் நான் என்னடி செய்வேன்?' என்கிறாள் தலைவி. அதற்கு தோழி,'வருந்தாதே. அவர் உன்னை ஒருநாளும் மறக்க மாட்டார். அப்படியே மறந்தாலும் அவர் சென்ற வழி இருக்கிறதே, அது அவருக்கு உனது நினைவினை உண்டு பண்ணும்' என்கிறாள்.

'அப்படியா! அது எப்படி ?' என்கிறாள் தலைவி.

'தலைவன் சென்ற அந்த வழியிலே யானைகள் ஆணும் பெண்ணுமாக ஏராளமாகத் திரியும்.வெயில் தாங்க முடியாது நீர் வேட்கை கொண்டு திரியும் பெண் யானையின் தாகம் தீர்க்க வேண்டி, ஆண் யானை மரப் பட்டைகளைப் பிளந்து தன் இணையான பெண் யானைக்கு அன்புடனும் காதலுடனும் ஊட்டி விடும். அதைக் கண்டதும் தலைவனுக்கு உன் நினைவு வந்துவிடும்.

விரைவில் வருவார், வருந்தாதே!

என யானைகளின் காதலுடன் மாந்தரின் காதலையும் இணைத்துப் பாடியுள்ளார் பாலை பாடிய பெருங்கடுங்கோ.

3) காதல் மிகுந்த தலைவன், தலைவியின் பிரிவுத் துன்பத்தை தனது அற்புதமான உவமை மூலமாக நம் கண்முன் நிறுத்துகிறார் சிறைக்குடி ஆந்தையார்.

'பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு
உடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவேம் ஆகிய வுலகத்
தொருவே மாகிய புன்மை நாம் உயற்கே.'

–குறுந்தொகை

தலைவியின் காதலை அவள் பெற்றோர் அறிந்ததால், அவளை வெளியே சென்று தலைவனைச் சந்திக்க



விடாமல் காவல் போட்டனர். அந்தக் காவல் மிகுதியில் தலைவனைச் சந்திக்க இயலாத ஆற்றாமையில் வருந்திய தலைவி, தன் துன்பத்தைத் தோழியிடம் இவ்வாறு தெரிவிக்கிறாள்.

நீர்வாழ்ப்பறவை அன்றில். ஆணும் பெண்ணுமாக ஒன்றையொன்று பிரியாமல் வாழ்வன. அவை குளத்தில் இணைந்து செல்லும்போது, அவற்றின் இடையே பூ ஒன்று இடைப்பட்டு தடையை ஏற்படுத்தினாலும் அந்த ஒரு நொடி பிரிவை ஓர் ஆண்டு கால அளவிலான பிரிவாக எண்ணி வருந்துமாம்.

அந்தப் பறவைகள் போல ஒருயிர் ஈருடல்களாக நாங்கள் வாழ்கிறோம்.

தலைவன் பிரிந்தபோது ஒருயிர் ஒருடலில் வாழும் இழிவு ஏற்படும். அதற்கு, தலைவன் பிரிந்தவுடன் என்னுயிரும் போய்விடுவது மேலானது என்கிறாள் தலைவி.

இப்பாடல் வழி அன்றில் என்னும் பறவைகள் தம்முள் அன்பு நிறைந்த வாழ்க்கை வாழ்வன என்றும், அவை தம்முள் பூ இடைப்படினும் அந்தப் பிரிவை ஓர் ஆண்டு காலப் பிரிவாகக் கருதி வருந்தும் என்னும் செய்தியும் குறிப்பிடப்படுகிறது.

அன்றில் பறவைகள் பூ இடைப்படும் ஒரு நொடி பிரிவை ஓராண்டு பிரிவு போன்று வருத்தத்துடன் தாங்கிக்கொள்ளும். ஆனால், என்னால் தலைவனின் பிரிவை ஒரு நொடிகூட தாங்க முடியாது. அதற்கு அவன் பிரிந்தவுடனேயே என் உயிர் போய்விடுவது மேலானது என்கிறாள் தலைவி.

தொடரும்....

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

சிறுகதை

# குடைச்சசல்

ஆதவன்

நானும் இங்கே பொறியியலாளராக இருந்தாலும் எனக்கும் பிரச்சினைகள் இருக்கும் என்று முதலாளி நினைக்கவில்லை. அன்று முதல் நாளாக வேலைக்கு வந்தான். அரபுதேசம் புதிது என்றாலும் என்னை போல சில இலங்கையர்கள் குறிப்பாக தமிழர்கள் இருந்தது அவனுக்கு தெம்பாக இருந்திருக்கும். அவன்தான் முரளி. 20 வயசு என்று நம்ப இயலாத உயரமும் உடம்பின் சுற்றும் இருந்தது. சிவலையும் இல்லாமல் கறுப்பாயும் இல்லாமல் பொது நிறத்தேகம். நெஞ்சை நிமிர்த்தி நடக்கும் அவனுக்கு தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும் என்று நினைத்தேன். இரண்டு கைகளிலும் முழங்கைக்கு கீழே புரியாத வடிவங்களில் பச்சை குத்தியிருந்தான். அவ்வளவு ஆடம்பரமான பெடியன் நவநாகரீகம் தெரிஞ்சவன் ஏன் வந்தான் என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. பெரும்பாலான நேரங்களில் முகத்தை உம்மென்றே வைத்திருந்தான். இந்தவயதில் பெடிகள் அரபு நாட்டுக்கு வேலைக்கு வருவது குறைவு. அப்படி வரும் ஒருசிலருக்கு இனியில்லையென்ற கஸ்டம். அதாவது நல்லதமிழில் சொல்லும் கூடாத வார்த்தையென்றால் வறுமையாகவும் இருக்கலாம். வறுமை என்றதை யாரும் எழுத்திலும் பேச்சிலும் பயன்படுத்துவதில்லை. அது கொடுமையானதா? வலியானதா? தெரியவில்லை. ஆனாலும் தயக்கம் இருப்பது உண்மைதான். ஊரில் அதிகம் வெயிலில் திரிந்திருக்கமாட்டான் போல இளக்காலை வெயிலுக்கே கண்ணை துருத்தி பார்த்தான். வேலைத்தளத்தில் நடுவில் வாகனங்கள் கட்டட பொருட்கள் அதாவது கல், மண், சீமெந்து, இரும்புக்கம்பிகள் பலகைகள்இ தீராந்திகள் போன்ற சாமான்களை ஏற்றிப் பறிக்க வரும் பாதை வெண் புழுதியால் போர்த்திருந்தது. அதில் பளிச்சென்ற வெயிலின் தெறிப்பும் கூட அவனை தொந்தரவு செய்திருக்கலாம். இங்கு வேலைக்கு வந்து ஒருசிலர் போதுமடா சாமி என்று ஒரு சில மாதங்களில் ஓடினவங்களும் இருக்கிறார்கள். வருடக்கணக்கில் பொறுமையா உழைச்சவனும் ஏதோ ஒரு நிலையில் மேல வந்தவர்களும் இருக்கிறார்கள். இவன் எப்படி இருப்பானோ ஆருக்கு தெரியும். எனக்கு சோலி இல்லாமல் குடைச்சல் கொடுக்காமல் இருந்தால் போதும். வந்த கொஞ்ச நாளிலையே தங்கள் குரங்கு சேட்டைகளை காட்டத்தொடங்கினால் வேற வழியில்லை. எனக்கு சில வழிமுறைகள் இருக்கிறது. அதன் படி நடக்கவேண்டும். ஏன் எதுக்கு என்று கேள்வி கேட்டு தொந்தரவு செய்யாத ஆளாக இருக்கவேண்டும். வருபவர்களிடம் முதலே சொல்லிவைத்துவிடுவேன்.

மொத்தமாக 15 இரண்டு மாடி வீடுகள் கட்டும் வேலைத்தளம். புதிதாக வாறவர்களுக்கு வேலையை ஒழுங்குபடுத்துவதும் சொல்லிக் கொடுப்பதும் முதலாளி எனது தலையில் போட்டுவிட்ட மேலதிக வேலைகள். ஏதோ நான் மிகவும் சந்தோசமாக இருப்பதாக நினைத்திருப்பார். நான் கத்தார் வந்து நாலரை வருடம் ஆகிறது. இதுவரை புதிதாக வந்த இரண்டு பேர் கொடுத்த தொல்லைதான் இன்னும் உளைச்சல் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. நல்ல காலம் முதலாளியிடம் சொல்லி வெளியேற்றிவிட்டேன். இது பெரிய நிறுவனம் என்றதாலே வேறு வேலைத்தளத்துக்கு அவர்களை மாற்றிவிட்டார்கள். ஆனால் இன்னும் நினைவில் நிற்கிற மாதிரி அவர்கள் இருவரின் தொல்லைகள் இருந்தது.

முரளியின் அடர்ந்த கேசம் நெற்றியில் வழிந்து கிடந்தது. காலைவெயிலொடு வீசிய கூதல் குளிர் காற்றுக்கு அலைந்து ஆடியது. கையை தலையில் வைத்து தலைக்கவசத்தை போடு என்ற சமிக்கையை காட்டினேன். அதே வாகனத்தில் வந்திறங்கிய சில வங்காளிகளும் வடநாட்டு இந்தியர்களும் நமட்டுச்சிரிப்புடன் சொல்லி வைத்தமாதிரி அவனையே பார்த்தனர். இந்த கட்டுமான வேலைத்தளத்தில் அனைவரும் தலைக்கவசம் அணியவேண்டும் என்பது கட்டாயம். அவனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான். என்னை ஒருமாதிரி பார்த்தவன் வெறுப்பாக உதட்டை சுளித்தபடி மஞ்சள் நிற தலைக்கவசத்தை அணிந்தான். எனக்கு ஓரளவுக்கு விளங்கினாலும் போகப் போக விளக்கம் வந்திடும் பழகிடுவான் என்று நினைத்தேன். இந்த வயதில் அனுபவம் இருக்காது சொல்லிக் கொடுக்கவேண்டும். நமது நாட்டில் சிறிய அளவிலான வேலைகளில் இந்த கட்டாயங்கள் இருப்பதில்லை. அதுதான் நாம் விட்ட தவறு. ஊர்ல வேலை இல்லாத நிலைக்கு மாற்று இப்படி வெளிநாடு போவது. கட்டாயம் இல்லாத பழக்கத்தை புதிய இடத்தில் செய்ய சொல்லும் போது போதுமானவரை போதுமான பயிற்சி கொடுக்கவேண்டும். அல்லது தொடர்ந்து அறிவுறுத்தவேண்டும். திரும்ப திரும்ப ஒழுங்குகள் சட்டங்களை ஞாபகப்படுத்தல் அதை மீறுவதை பெருமளவில் தடுக்கும் என்று அப்போது எனக்கு தோன்றவில்லை. யாரும் அதை சொல்லித்தரவுமில்லை. ஆறறிவு படைத்த மனிதன் தானே ஒன்றுக்கு இரண்டு தடவை சொன்னால் புரிந்து கொள்வான். அதை ஏன் திரும்ப திரும்ப சொல்வது வேண்டாத வேலை என்று நினைத்தேன். நானும் முதல்நாளே அவனைப்பற்றி விசாரிக்க வேண்டாம் என்று இருந்துவிட்டேன்.

'கேதீஸ் அண்ண இவன் புதுசு. உங்களோட கம்பி கட்டுற வேலைக்கு வைச்சிருங்கோ.' சாப்பாட்டு பாசலை ஏற்கனவே முதல் தள வேலைகள் முடிந்த வீட்டுக்குள் வைத்துவிட்டு வந்தவர் என்னையும் முரளியையும் பார்த்தார்.

ஏளனச்சிரிப்பை முகத்துக்கு நேராகவே உதிர்த்தவர் 'என்ன சின்ன பெடிகளை வேலைக்கு வைச்சால் எப்படி முடிக்கிறது? இதுவரைக்கும் வேலை செஞ்சசிங் எத்தின வருச அனுபவம் தெரியுமே. அவனுக்கு பதிலா வேலை தெரியாத இளம் பெடிகளை வைச்சு என்னெண்டு ஒப்பேற்றுறது.' என்று வழமைபோல வினவினாவர். வெத்திலை ஒன்றில் சுண்ணாம்பை பூசி பாக்கு சீவலை வைத்து மடித்து வாயிக்குள் தள்ளினார். ஆடிக்காட்டி விரலில் இருந்த சுண்ணாம்பையும் பல்லில் தடவி எஞ்சியதை இரும்பு துரு ஏறிய நீள காற்ச்சட்டையில் துடைத்தார். கிழமைக்கு ஒருநாள் அதாவது வெள்ளியில் விடுமுறை அன்றைக்கு வேலையாட்கள் சேரும் தலைநகர் தோகாவுக்கு அருகில் சில கடைகளில் வெற்றிலை இரகசியமாக விற்பார்கள். கேதீஸ் அண்ண எப்படியாவது வாங்கி வந்துவிடுவார். ஒருகிழமைக்கு தேவையானதை வாங்கி வைத்து நாளுக்கு மூன்றுதரம் வாய்க்கு அரைக்கும் பழக்கம் உள்ளவர். பஞ்சாபியான சிங் திரும்பி போனதில் இருந்து கடுமையான வேலை அவருக்கு. மற்றவர்களை மாற்றி உதவிக்கு அனுப்ப முடியாத நிலை. வேற வழியில்லாமல் முரளியை அவருக்கு உதவியாக விட முடிவெடுத்தேன்.

'சரி தம்பி வா. என்ன பேர்? ஊர்ல எவடம்?' என்று கேட்டவாறே கம்பிகள் வளைக்கும் இடத்துக்கு போனார். முரளியும் அவரை தொடர்ந்தான்.

'மத்தியானம் என்னோட சாப்பிட வா. நடந்து போற தூரம்தான். சாப்பாட்டுக்கடை அடுத்த சந்தியில இருக்கு.' என்று உரக்கச் சொன்ன என்னை திரும்பி பார்த்து தலையாட்டி விட்டு நடந்தான்.

முதல் நாள் என்பதால் முரளிக்கு வேலையாட்கள் விடுதியில் சமையல் ஆயத்தங்கள் இல்லை. அவனுக்கு கடையில் சாப்பாடு வாங்கி கொடுக்க முதலாளி என்னிடம் மேலதிக தொகையை தந்திருந்தார். அவசர தேவைகளுக்கு கையில் பணம் தந்து வைத்தால் போல அவ்வளவு நல்லவர் என்று சொல்லமுடியாது. மிச்ச காசை கறாராக வாங்கினபின்னர் தான் அவர் முகத்தில் சந்தோசக்களையே வரும். அதுவரை ஏதோ பறி கொடுத்த மாதிரி திரியும் ஆள்.

வேலைத்தளத்துக்கு சுற்றி தகர வேலி அடைக்கப்பட்டிருந்தது. கிழக்குப்பக்க வேலியை அண்டித்தான் கம்பிகள் வளைக்கும்இ துண்டு போடும் இடம் இருந்தது. அந்த வேலிக்கு அணுக்கமாக இருபது அடி தள்ளி அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய மதில். அதில் எட்டு அடிக்கு ஒரு மின்குமிழ்கள் வரிசையாக பொருத்தப்பட்டிருந்தன. இரவில் வேலை செய்வதில்லை என்பதால் அவற்றின் முழுஅழகையும் இரசிக்க முடியவில்லை. சில வேளைகளில் காலையில் அணைக்காமல் ஒளிர்ந்தபடி இருக்கும். ஆனால் புலர்ந்த பிறகு அதன் ஒளிக்கு பயனும் இல்லை அழகும் இல்லை தானே. மூன்று அடுக்குகள் கொண்ட வீட்டை பாதுகாக்கும் மதில் அது. இரண்டாம் தளத்தில் இந்தப்பக்கம் பார்க்க கூடிய வகையில் ஒரு இரண்டு வெளி ஜன்னல் இருந்தது. அதன் கதவுகள் திறந்து திரைமட்டும் மறைத்திருந்தது. ஆட்கள் நடமாட்டம் இருப்பது போன்ற அசூசையை உணர்ந்தேன். உற்றுப்பார்த்தால் வீட்டில் உள்ளவர்கள் கோபத்துக்கு ஆளாக நேரும். கவனத்தை வேறு திசைக்கு திருப்பினேன். முன்னர் கலைக்கப்பட்ட இருவரும் அந்தவீட்டை உற்றுப்பார்த்தார்கள். உற்றுப்பார்த்தது மட்டும் இல்லை எமியுடன் தப்பாக நடக்க முயன்றிருக்கிறார்கள். தன்னுடன் விரசமாக கதைத்து சீண்டியதை தனது கத்தாரி அரபி வீட்டுக்காரரிடம் அவள் சொல்லவில்லை.

'வீட்டு பணிப்பெண்ணாக வரும் பெண்கள் என்றால் காசைக்காட்டி பணிய வைக்கலாம் என்று தான் அநேகமானோர் நினைக்கிறார்கள். எனக்கு நிம்மதியாக வேலைசெய்ய முடியவில்லை. அந்த இருவருக்கும் சொல்லி புரிய வையுங்கள்' என்று கலங்கியவாறு ஆங்கிலத்தில் சொன்னாள். என்னிடம் மட்டும் சொன்னாள். என்மேல் அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தாள். எமி பிலிப்பைன்ஸ் நாட்டு பெண். வீட்டு பணிப்பெண்ணாக இருக்கிறாள். இயல்பாகவே சிரிப்பாள். தனது நாட்டுக்கே உரிய நல்ல நிறம் அவளின் அழகை இன்னும் கூட்டியது. அவள் காலையில் மதிலுக்கு வெளியில் நிற்கும் இரண்டு வெள்ளை நிற லேண்ட் குரூஸரை கழுவ வருவாள். அடிக்கடி பார்த்து பேசியதால் பிடித்திருந்தது. இங்கே வேலை முடிய இன்னும் இரண்டு வருடங்கள் ஆகலாம். அதற்கு முன் நான் அவளை விரும்புவதை சொல்லவேண்டும். அவளுக்கும் என் மீது விருப்பம் இருக்கும் என்று நினைக்கிறேன். கடைசியாக அவள் சொல்லி உடைந்தபோதே முடிவெடுத்தேன். எப்படியாவது இவர்கள் இருவரையும் இங்கிருந்து வெளியேறவேண்டும் என்று.

அவர்கள் இருவரும் அடிக்கொருதடவை தனது வீட்டை நோட்டம் விட்டதை வீட்டுக்காரர் கண்டிருக்க வேண்டும். அதனால் வீட்டுக்காரர் நேரடியாக எங்கள் முதலாளியிடம் புகார் சொல்லியிருந்தார். இதுவும் எனக்கு வாய்ப்பாக அமைந்தது. நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் அவர்கள் இருவரையும் நிறுத்த முடியவில்லை. வீட்டுக்காரன் காவல்த்துறைக்கு போனால் நிறுவனத்துக்கு கெட்ட பெயர் வரும். இப்படி பல காரணங்களை சொல்லி இருவருக்கும் இடத்தை மாற்றிவிட்டேன்.

முரளிக்கு இப்பவே சொல்லிவைக்க வேணும். முதல் தரம் ஆள பார்த்தவுடனேயே இவனும் அவர்கள் போல நடப்பானோ என்ற சந்தேகம் வந்தது உண்மை. இருந்தாலும் புதிதிலயே சொல்லி வைக்கிறதும் தொடர்ந்து ஞாபகப்படுத்திறதும் நல்லது. கேதீஸ் அண்ண அந்தப்பக்கம் திரும்பாமல் வேலையில் மட்டும் கவனமாக இருப்பார். அன்று மதியம் சாப்பிட போகும் போதே சாட மாடயா சொல்லி வைத்தேன். நான் சொன்னதை அவன் பெரிதாக காது கொடுத்து கேட்கவில்லை என்று புரிந்து கொண்டேன். இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு கடுமையானது என்பதையும் சேர்த்து தெரியப்படுத்தினேன். சாப்பாட்டு கடைக்காரன் ஒரு நல்ல சிவலையான நெடுவல் மலையாளி. பெயர் தெரியாது. தொடர்ந்து வந்து போறதால பழக்கம். இரண்டு ரியால் சேர்த்து ஒவ்வொரு கறிக்கும் போட்டு பில்லை வாங்கினேன். அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு முரளியை அவதானித்தேன். ஜன்னலை பார்க்காமலே வேலை பார்த்தான். மனதுக்கு சற்று நிம்மதியாக இருந்தது. இளம் வயதில் மனதுக்கு கட்டுப்பாடு வருவது உண்மையில் மெச்சத்தக்க விடயம். இருந்தாலும் ஏமியிடம் இருந்து ஏதாவது தகவல் வந்தால் மேற்கொண்டு யோசிக்கலாம். விடுமுறை நாளில் கைபேசியில் அழைப்பெடுத்து பேசுவாள்.

'அண்ண என்ர ஊர் கோண்டாவில். ஊர்ல வேலை வெட்டியும் இல்லை தெரியும்தானே. இஞ்ச கொஞ்சம் உழைச்சுப்போட்டு பிரான்சுக்கு பாய்வம் எண்டு பாக்கிறன்' முரளி நேற்று சொல்லும் போது எனக்கு வெக்கமாக போய்விட்டது. இவ்வளவுநாளும் நான் அடுத்த நிலைக்கு போறதை பற்றி சிந்திக்காமல் இருந்ததே அதற்க்கு காரணம். இப்படியே காலம் முழுக்க இருந்திட்டு ஊரில போய் கொண்டுபோற காசை கரைக்கிற வேலை செய்யப்போறன். இந்த கண்ராவிக்க எமியை ஒருதலையாக காதலிப்பதும் இரண்டுவருடம் முடிய காதலை சொல்லி திருமணம் செய்யவேண்டும் என்ற எண்ணமும் இருப்பதை நினைக்க வெட்கம் வராமல் வேற என்ன வரும்.

இன்று வெள்ளிக்கிழமை விடுமுறை நாள். இன்னும் கொஞ்சநேரம் உறங்கலாம் என்று கிடந்தேன். வெளியில் வேலையாட்கள் விடுதியிலும் யாரும் எழுந்திருக்கவில்லை. விடுமுறைநாளில் பெரும்பாலோருக்கு பிந்தியேழும்பும் பழக்கம் இருந்தது. அந்த அமைதியை கிழித்து எனது கைபேசி அலறியது. வழமையாக மதியம் சாப்பாட்டுக்கு பிறகுதான் அழைப்பாள். இப்போ நேரம் காலை எட்டு மணி. என்ன அவசரமாக இருக்கும் என்று தெரியவில்லை. முன்னரும் சில தடவைகள் இப்படி அவசரமாக அழைத்தவள். அப்படி இருக்க கூடாது என்று நினைத்துக்கொண்டேன்.

'இன்றைக்கு லீவு நாள் நான் வெளியில போக வீட்டுக்காரர் நீண்டநாளுக்கு பிறகு அனுமதி தந்திருக்கிறார். பிறகு உங்களுக்கு கோல் எடுக்க இயலாது சகோதரர். எனது ஆண் நண்பருடன் பொழுதை கழிக்க போகிறேன்.' என்றாள் குதூகலமாக.

எனக்கு தூக்கு வாரிப்போட்டது. 'இவ்வளவு நாளும் நீ ஏன் உனக்கு ஆண் நண்பர் இருப்பதை சொல்லவில்லை?' என்று அவள் சொன்னதை ஜீரணிக்க முடியாமல் கேட்டேன்.

'அந்த ஆண் நண்பர் புதிதாக பழக்கமானவர். சொல்லவேண்டும் என்று தோன்றவில்லை. அவரும் அதை விரும்பவில்லை.'

மேற்கொண்டு அவளுடன் பேச விரும்பவில்லை. இணைப்பை துண்டித்தேன்.

(முற்றும்)

# மரபு மருத்துவத்தில் மலச்சிக்கலை நெறிப்படுத்தும் முறை

உண்ட உணவு செரிமானம் ஆக, சாரைப் பாம்பு போல 'சரசரவென' வளைந்து நெளிந்து, உணவுப் பொருட்களைக் கூழ்மமாக்க வேண்டிய குடல் பகுதிகள், கொழுத்த மானை விழுங்கிய மலைப் பாம்பு போல, அசைவற்றுக் கிடக்கின்றன.

இதற்கான காரணத்தை ஆராய, மருத்துவ வல்லுநர்களை அழைக்க வேண்டிய அவசியமில்லை. நாம் சாப்பிடும் உணவு முறையை முறைப்படுத்தினாலே போதுமானது. தவறான வாழ்க்கை முறையால் உண்டாகும் மிக முக்கியமான தொந்தரவுகளில் மலக்கட்டுக்கு முதல் இடம் கொடுக்கலாம்.

## மலக்கட்டு காரணங்கள்



அடிமுதுகு பகுதியை வலுவாக்கும் பயிற்சி

முதிர்ந்த வயதில், குடலின் செயல்பாடுகள் பாதிக்கப்படுவதால் ஏற்பட்டுவந்த மலக்கட்டு பிரச்சினை, தற்போது குழந்தைகள் முதல் முதியோர்வரை அனைவரையும் தொற்றிக்கொண்டிருக்கிறது. காலம் தவறிய உணவு, அதிக அளவு உணவு, குறை உணவு, துரித உணவு எனப்படும் குப்பை உணவு, மசாலா சேர்த்த உணவு போன்றவை மலக்கட்டை உருவாக்குவதற்கான முக்கியமான காரணிகள்.

இயற்கை அளித்த வரப்பிரசாதங்களான காய், கனிகளைத் தவிர்ப்பது, உணவை மென்று சாப்பிடாமல் அப்படியே விழுங்குவது, அதிகமாக அசைவ உணவைச் சாப்பிடுவது போன்றவை அடுத்த வரிசை காரணங்கள்.

புகைப்பிடித்தல், மது, காபி, டீ, குளிர்பானங்களை அதிகமாக அருந்துதல், உறக்கமின்மை, வேலைப்பளுவின் காரணமாகப் போதுமான அளவுக்கு நீர் பருக மறப்பது போன்ற காரணங்கள், மலக்கட்டை உண்டாக்குவது உறுதி.

## மன அழுத்தமும் காரணம்



மன அழுத்தத்துக்கும் நோய்களின் உருவாக்கத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பது ஆராய்ந்து வெளியிடப்பட்ட உண்மை. மலக்கட்டு மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன? செரிமானத்தைக் கட்டுப்படுத்தும் நரம்பு மண்டலம், மன அழுத்தத்திடம் மனதைப் பறிகொடுத்துப் பாதிக்கப்பட்டு மலக்கட்டு உண்டாக வழி செய்கிறது. நாட்பட்ட மன அழுத்தத்துக்கு ஆட்படும்போது, ஒருவருடைய குடலில் இயல்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் இயக்கங்கள் தீவிரமாகப் பாதிக்கப்பட்டு மலக்கட்டு தொந்தரவு விஸ்வரூபம் எடுக்கிறது. திரு மண நிகழ்ச்சி, தேர்வு, அதிகப் பணி சுமை இருக்கும் நேரத்தில், மலம் கழிக்க வேண்டும் என்ற எண்ணமே குறைவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மன அழுத்தத்துக்கும் மலக்கட்டுக்கும் உள்ள தொடர்பை அறுக்க, வழக்கறிஞரிடம் செல்ல வேண்டியதில்லை. வாழ்க்கையின் அழகை ரசித்து, மனசை உற்சாகமாக்க, தெளிவான சிந்தனை இருந்தால் போதும்.

## மதுவும் மலக்கட்டும்




நீண்ட நாட்களாக மது அருந்தும் பழக்கம் உடைய திறமைசாலிகளுடன், மலக்கட்டும் கைகோர்த்துக்கொண்டு வீர நடைபோடுவதில் ஆச்சரியமில்லை. ஆல்கஹாலானது, மலத்தில் உள்ள ஈரப்பசையை உறிஞ்சி வறட்சியாக்கி, குடல் அசைவுகளைத் தடுத்து, மலக்கட்டை உண்டாக்கி விடும்.

## சித்த மருத்துவம்



திரிபலா சூரணம் (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) அரை தேக்கரண்டி அளவு, தினமும் இரவு வெந்நீரில் கலந்து அருந்தலாம். திரிபலா சூரணம், மலக்கட்டை நீக்குவது மட்டுமன்றி, உடலில் தேங்கிய நச்சுகளையும் (Toxins) வெளியேற்றும் சிறப்புடையது. தனிக் கடுக்காய் பொடி, மலைக் கிராமங்களில் முக்கிய மலமிளக்கி மருந்தாகப் பயன்பட்டு வருவது. மேலும் நிலவாகைச் சூரணம், ஏலாதி சூரணம், பொன்னாவாரைப் போன்ற சித்த மருந்துகளை மருத்துவரின் அறிவுரைப்படி எடுத்துக்கொள்ளலாம்.

செரிமானத்தைத் தூண்டக்கூடிய சீரகம், மிளகு, இஞ்சி, ஓமம், பெருங்காயம் ஆகிய பொருட்களை உணவில் அடிக்கடி சேர்த்துக்கொள்ள வேண்டும். பீன்ஸ், கேரட், பூசணி, உருளை, முட்டைகோஸ் போன்ற காய்கறி




வகைகள், கொட்டைகள், விதைகள் போன்ற வற்றை அதிகமாக உட்கொண்டு மலக்கட்டைத் தடுக் கலாம். தினசரி நடைப்பயிற்சி செய்வதால், குடல் பகுதிகள் நன்றாகச் செயல்பட்டு மலத்தைச் சிரமமின்றி வெளியேற்றும். அப்படியும் மலம் சரியாக வெளியேறாத போது, துணியை நீரில் நனைத்து வயிற்றுப் பகுதியில் போடலாம்.

## விளக்கெண்ணெய் மகத்துவம்



தசவாயுக்களில் ஒன்றான அபானவாயு (கீழ்நோக்கிச் செலுத்தப்படும் வாயு) பாதிக்கப்படுவதால், மலக்கட்டு உண்டாகும் என்கிறது சித்த மருத்துவம். ஆமணக்கு எண்ணெய்க்கு, மலமிளக்கி செய்கையைக் கொண்டிருப்பது மட்டுமன்றி, அபான வாயுவைக் கட்டுப்படுத்தும் திறனையும் இருப்பதால், வாரம் ஒருமுறை அரை தேக்கரண்டி அளவு வெந்நீரில் கலந்து உட்கொள்ளலாம். மலக்கட்டு இருக்கும்போது, அடிவயிற்றின் மீது விளக்கெண்ணெயைத் தடவி, அதன் மீது ஆமணக்கு இலைகளை வதக்கிப் போட்டால் குணமாகும். எருவாயின் உட்புறத்தில் விளக்கெண்ணெயைத் தடவ, மலம் இளகி வெளிப்படும்.

## இளக்கும் கீரைகள்

பொதுவாகவே அனைத்துக் கீரை வகைகளும் மலத்தை இளக்கி வெளியேற்றும் சக்தி கொண்டவை என்பதால், தினசரி உணவில் கீரை வகைகளுக்குத் தாராளமாக அழைப்பு விடுக்கலாம்! கீரைகளில் அதிக அளவு நார்ச்சத்து இருப்பது மட்டுமன்றி, உடலுக்குத் தேவையான விற்றமின்களும் உள்ளன.



## நார்ச்சத்துப் பழங்கள்



பழ வகைகளில் பப்பாளி, வாழை (3.1 கிராம் நார்ச்சத்து), கொய்யாப் பழம் (5.4 கிராம் நார்ச்சத்து), அப்பிள் (4.4 கிராம் நார்ச்சத்து), பேரிக்காய் (5 6 கிராம் நார்ச்சத்து) போன்ற இயற்கை அமுதங்களை அடிக்கடி எடுத்துக் கொள்ளலாம். உலர் திராட்சைகள், உலர் அத்தி ஆகிய வற்றை நீரில் ஊறவைத்து, இரண்டு வேளை சாப்பிட்டால் மலத்தை இளக்கும். ஆளிவிதை (Flax seeds) பொடி செய்து வெந்நீரில் கலந்து குடிக்கலாம். நார்ச்சத்து அதிகமுள்ள உணவை உட்கொள்வது மட்டுமன்றி, அதை வெளியேற்றத் தேவையான அளவு தண்ணீர் அருந்துவதும் மிகவும் முக்கியம்.

நீண்ட நாட்களாகத் தொடரும் மலக்கட்டு பிரச்சினையைச் சரிசெய்யாவிட்டால் அது தோல் நோய்கள், மூலம், இதய நோய், புற்று நோய் என வேறு பல நோய்களுக்கு அடித்தளமாக அமைந்துவிடும். எனவே, அடித்தளத்தை வலுப்படுத்தாமல், மலத்தைச் சரியாக வெளியேற்றி உடலை உற்சாகப்படுத்துவோம்.

# அடிமுதுகு பகுதியை வலுவாக்கும் பயிற்சி



இருசக்கர வாகனம் ஓட்டுபவர்களுக்கு முதுகுவலி ஏற்பட வாய்ப்புகள் அதிகம். சிலருக்கு அடிமுதுகில் வலி அதிகமாக இருக்கும். அதிலும், தொடர்ந்து அதிக தூரம் வண்டியிலேயே பயணம் செய்ய நேரிடும்போது கை, கால், மூட்டு, தோள்பட்டை போன்ற பகுதிகளில் தசைகள் இறுகி வலி ஏற்படும்.

இந்த வலியில் இருந்து நிவாரணம் பெற வீட்டிலேயே, 20 நிமிடங்களில் செய்யக்கூடிய பயிற்சி உள்ளது. அந்த பயிற்சி தரையில் நேராக குப்புறப் படுத்துக் கொண்டு, வலது கையை பக்கவாட்டில் உடலை ஒட் டியபடியும், உள்ளங்கை மேல் நோக்கியும் வைக்க வேண்டும். இடது கையை முன்பக்கமாக நீட்டி தரையைத் தொடும்படி வைக்க வேண்டும்.

இப்போது, இடது கை மற்றும் வலது காலை மேலே உயர்த்த வேண்டும். கால்களை வளைக்கக் கூடாது. இப்படி 20 முதல் 30 தடவைகள் செய்ய வேண்டும். ஒரு பக்கம் செய்த பின்னர் 5 விநாடிகள் ஓய்வு எடுத்த பின்னர் மறுபக்கம் பயிற்சியை செய்ய வேண்டும்.

பலன்கள்: முதுகெலும்பு, முதுகில் உள்ள நரம்புகள் வலுவடையும். அடிமுதுகு வலி குறையும். இரத்த ஓட்டம் சீராகும். முழங்கால் மூட்டுப் பகுதி வலுப்பெறும்





# சிறுவர் கதிர்





## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




## புத்திசாலி புலவரும் நெல்மணிகளும்

அது ஒரு அழகிய கிராமம். அந்த கிராமத்தில் ஒரு திறமை வாய்ந்த புலவர் ஒருவர் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

சில மாதங்களுக்கு பிறகு, அவரது குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது. மேலும் இதிலிருந்து மீள்வதற்கு என்ன செய்வதென்று புலவர் யோசித்துக் கொண்டு இருந்தார்.

புலவரின் நிலையைப் பார்த்த அந்த கிராமத்தின் தலைவர் புலவரிடம் சென்று, ‘நம் நாட்டின் அரசரை புகழ்ந்து பாடும் புலவருக்கு கேட்கும் பரிசினை கொடுக்கிறார். அந்த பரிசினைப் பெறுவதற்கு நீயும் முயற்சிக்கலமே‘ என்று கூறினார்.

இது சரியான தருணம் என்று கருதிய புலவரும் மன்னரை பார்க்க அரண்மனை நோக்கி பயணித்தார்.

மன்னரைப் புகழ்ந்து பாடுவதற்காக சென்ற புலவர் அரண்மனையை அடைந்தார். மன்னரைப் பற்றியும், அவரது ஆட்சி பற்றியும் புகழ்ந்து பாடினார்.

புகழ்ந்து பாடிய புலவரின் பேச்சில் மகிழ்ச்சி அடைந்த அரசன் புலவனிடம், ‘உனக்கு என்ன பரிசு வேண்டுமோ கேள்‘ என கூறினார்.

புலவரும் இதுபோன்ற வறுமை எப்பொழுதும் என் குடும்பத்தை பாதிக்கக் கூடாதென்று யோசித்தார். பின்னர் அரண்மனையில் ஒரு சதுரங்க பலகை இருப்பதைப் பார்த்தார். ‘அரசே எனக்கு பெரிதாக எதுவும் வேண்டாம் அங்கே சதுரங்க பலகை ஒன்று இருக்கிறதல்லவா அதில் 1ம் கட்டத்தில் ஒரு நெல்மணியை வைத்த பின் ஒவ்வொரு கட்டத்திற்கும் அதனை இரட்டிப்பாகினால் அதை தக்க பரிசாக ஏற்றுகொள்வேன்‘ என்று கூறினார். மன்னர் புலவரைப்பார்த்து, ‘நெல் மணிகள் போதுமா? தங்கம், வைரம் போன்ற விலை உயர்ந்த பொருட்கள் வேண்டாமா?’ என்று கேட்டார்.

புலவரோ ‘அரசே எனக்கு நெல்மணிகள் மட்டும் போதும்‘ என்று கூறிவிட்டார்.

பொன்னோ பொருளோ கேட்பார் என எண்ணியிருந்த அரசனும் புலவனை எள்ளி நகையாடி சரி என கூறிவிட்டார்.

பின்னர் அரசர் அரண்மனை சேவகர்களிடம், ‘புலவர் கேட்ட நெல்மணிகளை எடுத்து வாருங்கள்‘ என்று கட்டளையிட்டார். சேவகர்களும் சதுரங்கப் பலகையில் புலவர் கூறியபடியே நெல் மணிகளை சதுரங்க பலகையின் மேல் அடுக்கினர்.

1ம் கட்டத்தில் 1, 2ம் கட்டத்தில் 2, 3ம் கட்டத்தில் 4, 4ம் கட்டத்தில் 8 என நெல் மணிகளை அடுக்கினர்.

10ம் கட்டத்தில் வந்த போது நெல்மணிகளின் எண்ணிக்கை 512 என ஆனது.

20ம் கட்டத்தில் வந்த போது நெல்மணிகளின் எண்ணிக்கை 5,24,288 என அதிகரித்தது.

பாதி தூரம் அதாவது 32வது கட்டத்தை அடைந்த போது நெல்மணிகளின் எண்ணிக்கை 214,74,83,648 ஆக பெருகியது.

விரைவில் நெல்மணிகளின் எண்ணிக்கை கோடானகோடிகளை தாண்டியது. இதனால் அரசன் தன் ராச்சியம் முழுவதையும் அந்த புத்திசாலி புலவரிடம் இழக்கும் நிலை ஏற்பட்டது.

புலவரின் புத்தி சாதுரியத்தையும், தான் செய்த தவறை உணர்ந்த அரசர் புலவரிடம் மன்னிப்பு கேட்டார்.

இந்த ராச்சியத்தை ஆள்வதற்கு என்னைவிட இந்த புலவருக்கு அதிக திறமை உள்ளது என்று சபை முன் கூறிவிட்டு அரசர் பதவியை புலவரிடம் ஒப்படைத்தார்.

**நீதி: கூட்டுப்பலனின் பெருக்கும் சக்தியை எப்பொழுதும் குறைத்து மதிப் பிடக் கூடாது.**

## சொல்லின் வகைகள்

தமிழில், சில எழுத்துகள் மட்டும் ஓர் எழுத்தாக தனித்து நின்று பொருள் தரும். அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும்.

எடுத்துக்காட்டு:

ஆ, ஈ, கை, தை, பூ, மா, பலா, வாழை, தமிழ், கல்வி, பள்ளி, நூல், கடல், நிலம், வானம், நீர், காற்று.

இவ்வாறு பொருள் தருமாறு வரும் ஓர் எழுத்து அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துகளின் தொகுப்பு சொல் எனப் படும்.

சொல்லின் வகைகள் சொற்கள் நான்கு வகைப்படும். அவை;

**பெயர்ச்சொல்**
**வினைச்சொல்**
**இடைச்சொல்**
**உரிச்சொல்**

**பெயர்ச்சொல்**

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் (எ.கா.- அணில், மரம், கல்வி, பள்ளி, ஆண்டு, பசுமை, தலை)

**வினைச்சொல்**

ஒரு செயலைக் குறிக்கும் சொல் (எ.கா. - படி, எழுது, எழுதினான், படித்தான்)

**இடைச்சொல்**

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும். தனித்து இயங்காது.

எடுத்துக்காட்டு - கு, ஐ, உம், இல்

கு - பள்ளிக்குச் சென்றான்

ஐ - புத்தகத்தை எடுத்தான் (தை = த் + ஐ)

உம் - எண்ணும் எழுத்தும் (ண் + உம், த் + உம் )

இல் - பேருந்தில் சென்றான் (தில் = த் + இல்)

**உரிச்சொல்**

பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்லுடன் சேர்ந்து அவற்றை மிகுதிப்படுத்தும் பொருளில் வரும்.

எடுத்துக்காட்டு - மா, சால, தவ, நனி, கூர், கழி, கடி

மா - மாநகரம் (மிகப்பெரிய நகரம்

மா எனும் உரிச்சொல் பெரிய எனும் பொருளில் வருகிறது)

சால - சாலச்சிறந்தது (மிகவும் சிறந்தது)


## குறள் அறிவோம்

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து

சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

குறள்:981- அதிகாரம்:சாண்றாண்மை, பால்: பொருள்

கடமை இவை என்று அறிந்து சான்றாண்மைமேற்கொண்டுநடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.



## தமிழ் எழுத்துகளின் வகைகள்



எழுத்து என்பது வரி வடிவத்தால் எழுதப்படுவதும், ஒலி வடிவத்தால் எழுப்பப்படுவதும் (உச்சரிக்கப்படுவதும்) ஆகும்.

தமிழ் எழுத்துகள் இரண்டு வகைப் படும். அவை, முதல் எழுத்துகள் மற்றும் சார்பெழுத்துகள் ஆகும். மேலும், முதல் எழுத்துகள் இரண்டு வகைகளாகவும், சார்பெழுத்துகள் பத்து வகைகளாகவும் உள்ளன.

முதல் எழுத்துகள் - முதன்மையானவை (மொத்தம் 30 எழுத்துகள்)

உயிர் எழுத்துகள் (அ முதல் ஔ வரையிலான 12 எழுத்துகள்)

மெய்யெழுத்துகள் (க் முதல் ன் வரையிலான 18 எழுத்துகள்)

சார்பு எழுத்துகள் - முதல் எழுத்துகளைச் சார்ந்து வருபவை

உயிர்மெய் (க முதல் ன வரையிலான 216 எழுத்துகள்)

ஆய்தம் (ஃ எனும் 1 ஆய்த எழுத்து)

உயிரளபெடை

ஒற்றளபெடை

குற்றியலிகரம்

குற்றியலுகரம்

ஐகாரக்குறுக்கம்

ஔகாரக்குறுக்கம்

மகரக்குறுக்கம்

ஆய்தக்குறுக்கம்

## ஆமணக்கு



ஆமணக்கு வளர்த்தேனே
விதைகளதை எடுத்தேனே!
செக்கிலிட்டு ஆட்டியே
எண்ணெய்தனை எடுத்தேனே
எண்ணெய்தனை ஊற்றியே
ஊர்திதனை இயக்கினேனே!

## இலக்கணம் அறிவோம்

தமிழ் மொழியின் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை:

**எழுத்து இலக்கணம்**
**சொல் இலக்கணம்**
**பொருள் இலக்கணம்**
**யாப்பு இலக்கணம்**
**அணி இலக்கணம்**



சிறுகதை

# கிறுக்கலான கன்னிமை

பிரம்மியா சண்முகராஜா

வானம்பாடிக்கூட்டங்கள்போல்வாழ்ந்துஅனுபவிக்கும் சிட்டுகளிடம் ஓர் சின்ன பரிசோதனைக்காய் ஆயத்தமானாள் அர்த்தனா.கிராமத்து பாடசாலையில் 2 மணி நேரம் அவளும் சிறுமியாய் உணர்வு கலக்கும் தருணம் அது. விளையாட்டுக்களும் வினா விடைகளும் குழுக்களாய் தனியாய் மகிழும் தருணமானது அந்த கணங்கள்.

சூரியனும் நிலவும் ஒரே வானில் தானே சூரியக் கதிர்கள் ஏன் சுடுகின்றன? நிலவு துகள்கள் ஏன் குளிர்கின்றன? என அறியாதவள் சுடும் என்ற பின்னும் தொட்டுப் பார்த்து அனுபவம் காணத் துடிக்கும் விட்டிலாய் அசைவெல்லாம் ஆரோகணம் உச்சம் காட்டிக்கொண்டு அனைத்துக்கும் கையை உயர்த்தி தன்னை பிரதிபலித்துக் கொண்டு இருந்தாள். கீர்த்தி. வயது 12 தான் 16 வயது மாணவர்களும் பங்கேற்றனர். அவர்களுக்கு போட்டியாய் முன் அணியில் மின்னிக் கொண்டு இருந்தாள். ஆனாலும் இமைத்து மூடும் விழிகளில் அவள் துடிப்பு தாண்டிய துறவறம் சிரிப்பில் விரித்துச் சுருக்கும் இதழில் மின் துண்டிப்பு நாடகம்.

அர்த்தனா அறுபது மாணவர்கள் மத்தியில் குழந்தையாய், ஆசானாய், தாயாய், சகோதரியாய், வித்தைகாரியாய் கற்பித்துக் கொண்டே அவர்களில் ஒவ்வொருவரையும் கற்றுக் கொண்டு இருந்தாள். அவள் அமைதியை வசனமிட்டு வாசிப்பவள் கண்களின் மொழி புரிதல் கைவந்த கலை அவளுக்கு. கீர்த்தியின் மின்வெட்டுபுன்னகையைவிரித்துத்தெளிந்துவாசித்தாள். அவளிடம் ஏதோ ஓர் ஈர்ப்பு அர்த்தனாவுக்கு ......... கருத்தரங்கின் அந்தி நேரம் நெருங்கியது நன்றியுடன் விடைபெறஅனைவரையும்ஒன்றுசேர்த்தாள்அர்த்தனா. பிள்ளைகளில் சிலர் மிஸ் மிஸ் என்றும் சிலர் டீச்சர் என்றும் பலர் அக்கா என்றும் அவள் ஓரமாய் கூடி நெருங்கி கருத்தரங்கையும் அவளையும் கருத்தாக்கிக் கொண்டனர். அர்ச்சனாவின் சேலை நுனியை பிடித்தபடி உங்க புடவை ரொம்ப அழகா இருக்கு! நான் உங்களை எப்படி கூப்பிடலாம் என்று நெருக்கினாள் கீர்த்தி. அர்த்தனாவின் ஐயம் உறுதியானது. நீங்கள் எப்படி விரும்புகிறீர்கள் என் பெயர் அர்த்தனா உங்களுக்கு விருப்பம் என்றால் அப்படியும் கூப்பிடலாம் என்று கீர்த்தியின் எண்ணத்தில் உரிமை எடுத்துக் கொள்ள எத்தணித்தாள்.

பாடசாலை நிறைவு மணி காற்றோடு காதுகளை வந்தடைந்தது அர்ச்சனாவின் கவனமெல்லாம் மறைமுகமாக கீர்த்தி மேல் இருந்தது அவள் சிரிப்பில் ஒரு மின் துண்டிப்பு திடீரென உறக்க நிலைக்கான அவள் விழிகளின் பயணம் கீர்த்தி சற்று முன் நிலைக்கு எதிர் மறை தோற்றம் காண்பித்தாள். இந்த மாற்ற நிலை அவளை படம் போட்டு திரையிட்டது நிகழ்வுகள் நிறைவடைந்து அனைவரும் விடை பெற்றனர். அர்த்தனா அவள் நினைவுகளை கீர்த்தியிடம் விட்டு விட்டு அவளும் கடந்து சென்றாள். அன்று இரவு பகலானது ஏதோ ஓர் சலனம் விடியலும் சலிப்பாக ஏதோ ஒரு உந்தல் கீர்த்தியை பார்த்தால் என்ன எப்படி என்று சிந்தித்தபடி பாடசாலைக்கு கடந்து சென்றாள் அதிபரின் அனுமதிக்காக காத்திருந்தாள். அறிமுகமானவர் அர்த்தனா அங்கு பிள்ளைகள் பலர் ஓடி வந்து அர்த்தனா மிஸ்.... சிரித்து குழைந்து உங்களைத் தெரியும் என்றும் மீண்டும் அறிமுகம் செய்வதாய் அழாவளாவிச் சென்றனர். மனம் கீர்த்தியின் பால் இருந்ததால் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை சிரித்து விடையளித்தாள்.

கூட்டமாய் பேசிய சிலருடன் தனியாகப் பேச அதிபரிடம் அனுமதி பெற்றாள் அர்த்தனா இரண்டு மூன்று பிள்ளைகளுடன் நாம் பேசிவிட்டு கீர்த்திக்காய் காத்து இருந்தாள். அதே குறும்பு என்னை விட யாரும் இல்லை மகிழ்ந்திருக்க என்று மரம் செடி கொடிகளை இரண்டு கைகளாலும் கிள்ளிக் தட்டி காற்றுக்கும் ஊற்றிக் கொடுத்து ஓடிவந்து அர்த்தனா அக்கா........ என்று உரைக்க அழைத்தாள். வாங்கம்மா எப்படி இருக்கீங்க உட்காருங்கள் பேசலாம் என்று இருக்கையை விரல் நீட்டினாள் தனியா என்ன அக்கா பேசணும் ? கீர்த்தி அக்கா உங்களோட மட்டும் இல்லடா எல்லார் கூடவும் பேசுவனம்மா இப்போ உங்கள் நேரம் என்றாள் அர்த்தனா.

அப்படியா அக்கா எப்படி என்னுடைய பெயர் கீர்த்தி என்று நினைவு வச்சிருக்கீங்க என்ன? எனக்கும் உங்களை ரொம்ப பிடிக்கும் இண்டைக்கும் நீங்க சூப்பரா புடவை கட்டி வந்து இருக்கீங்க என்று நெகிழ்ந்து நெருக்கமானாள்.

இன்னும் ஏதோ நம்பிக்கை ஈர்ப்பு நெருக்கம் அர்த்தனாவின்பால் ஈர்ந்தது அவளை... அர்த்தனா அக்கா என்று தொடர்ந்தாள்....... எனக்கு அக்கா இல்ல உங்களை என்னோட அக்காவா நினைக்கவா? எங்க வீட்டுக்கு நீங்க வர முடியுமா? என்றாள். நிச்சயமாக ஒருநாள் வருகின்றேன் பதிலளித்த படி கீர்த்தி வீட்ல யாரெல்லாம் இருக்கிறாங்க கதை நகர்த்தினாள் அர்த்தனா.

என் வீட்ட நானும் அம்மாவும்....... உடன் நிசப்தமாய் நிறுத்திக் கொண்டாள். அர்த்தனா சிந்தித்தாள் எப்படிக் கேட்பது ஏன் அப்பாவைப் பற்றி ஏதும் சொல்லாமல் நிறுத்திவிட்டாள் அப்படியே சிந்தித்தபடி உங்க அப்பாவின் தொழில் என்ன? என கேட்டாள். கீர்த்தி நேர் எதிர் உணர்வுகளை கூட்டிப் பெருக்கி கழித்து புரியாத விபரிப்பால் விழுங்கி உமிழ்ந்தாள்.

சில வினாடிகள் தனித்து அப்பா!.... வெளிநாட்டில் என்றாள். ஓ கீர்த்திமா அக்கா உங்கள கஷ்டப்படுத்தியது போல் பேசிட்டேனா? உடலை நிமிர்த்தி முன் சாய்ந்து அவள் கண்களை எதிர் நோக்கினாள். அக்கா தொனி குறுகி மிகவும் அடங்கி ஒலித்தது. கீர்த்தி இன்னும் இறுக்கி மூடிக்கொண்டாள் அர்த்தனா அவளை திறக்க முனைந்தாள். காலையில் என்ன சாப்பிட்டீங்க கீர்த்தி? இடியப்பம் அக்கா.... உங்களுக்கு விருப்பமானவங்களை பற்றி பேசுவமா? மறுநொடியே ஓ..... ஆமா எனக்கு எலான் மாஸ்க் பிடிக்கும் எனத் தொடங்கி டாட்டா வரை பெரும் புள்ளிகளை விபரணமாக்கினாள் கீர்த்தி. 12 வயதில் இத்தனை காத்திரமான அறிதல்கள் அவளிடம். அர்த்தனா முப்பதுகளின் பின்புதான் பிரபலங்களைத் தேடி படித்திருப்பாள். அவள் தொடர் துடிப்பு தேடல்களின் கார்த்திரம் திடீர் திடீர் அமைதி லாவா குழம்புகளின் கசிவு......... அர்த்தனா அவள் எண்ணச் சுனையில் அமைதியாய் சுழி ஓடிக் கொண்டிருந்தாள்.

அர்த்தனா அக்கா என்ன யோசிக்கிறீங்க அப்பா எனக்கு மடிகணனி வாங்கி கொடுத்து இருக்காரு அதுல தான் இது எல்லாம் பாப்பேன் என்றாள். அவளின் மனநிலை இப்போது வேறு ஒரு பிரதிபலிப்புடன் இன்னும் ஆழம் செல்ல ஆயத்தமானாள் அர்த்தனா தட்டிக் கொண்டே இருந்தாள்.

அந்த நேரம் அர்த்தனாவின் அலைபேசி அழைத்தது அவளை கீர்த்திமா அக்காவோட அப்பா கூப்பிடுறாங்க கதைச்சிட்டு வரட்டா அனுமதி எடுத்தாள். ஓமக்கா தாராளமா கதைங்க...........? சாப்பிட்டியாமா? இனிமேல்தான்பா... இங்கு ஒரு தங்கா கூட பேசிட்டு இருக்கேன்பா.... சரிமா அந்த பிள்ளை சாப்பிட்டதோ தெரியல இரண்டு பேரும் சேர்ந்து சாப்பிட்டுவிட்டு பேசுங்க...... அப்பாவின் தொடர்பாடல் அலைபேசி தாண்டி கீர்த்தியின் செவி வழி புகுந்தது அவள் நெஞ்சை நெருடி உடைத்து திறந்தது குனிந்தபடி இருந்தாள் கீர்த்தி. அலைபேசியை அணைத்து அர்த்தனா, கீர்த்தி.... என்றாள். கருவிழி கண்ணீரில் மிதந்து கொண்டு இருந்தது அர்த்தனாவின் முயற்சிக்கு அப்பாவின் குரல் ஆதரவளித்தது போல மெல்ல திறந்தது அவள் இரும்புத் தாழ்பாள் இட்ட உள்ளக் கதவுகள்.. கீர்த்தியின் கைகளை பற்றியபடி, நம்புமா.... அக்காவ என்னாச்சும்மா? நேரடியாகவே வினா கொடுத்தாள்.

கோடை வானம் மாரி போர்த்திக் கொண்டதுபோல் கண் தூறலனனாள் கீர்த்தி.தேக்கத்து சேமிப்பு கழிமுகம் காணுமா? எங்கே அவள் துடிப்பு? இருள் மறைத்து ஏமாற்றி இதம் காட்டிய பல்வரிசை எங்கே? மின்மினியாய் சிமிட்டி சிரித்த கருவிழி எங்கே? கதவுகள் மடை திறந்த வாவியாய் பெருக்கெடுத்தாள்..... இத்தனை அடைசல்களின் காரணம் தான் என்ன? தேடலின் ஆழத்தில் அர்த்தனா அவளை என்ன செய்ய அணைக்கவா? கண் துடைக்கவா? தலை கோதவா? செய்கைகள் ஏமாற்றியவளாய் எழுந்து கீர்த்தியின் ஓரமாய் போய் தோள்களைத் தழுவிக்கொண்டாள். முட்டியிட்டு முகத்தின் முன் மண்டியிட்டபடி மனம் திறப்பாயா என்று பார்வை தெளித்தாள்.

அர்த்தனாவின் தொடுகை பார்வை இருக்கை நிலை இன்னும் இறுக்கம் தளர்த்தியது கீர்த்தி சற்று அமைதலானாள். மொழி கடந்த அர்த்தனாவின் உரையாடல் அவளுக்கு உணர்வழித்ததோ என்னவோ ஒன்று சொல்லட்டுமா அக்கா....... என்று விம்மினாள் கீர்த்தி. அவளைத் தழுவியபடி சொல்லுமா அக்கா கூட இருக்கேன் என்று ஆறுதலாய் தாயானாள் அர்தனா.

என்னோட அப்பா செல்வம், நான் அவரை நேரில் பார்த்ததே இல்லை அக்கா அம்மா ஜெனிதா, அப்பா விரும்பி கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களாம். அப்பாவுக்கு அக்காக்கள் நான்கு தங்கைகள் நான்கு நடுவில் என் அப்பா ஒற்றை ஆண் பிறவியாம். அவங்க குடும்பம் பெருசு தானே அக்கா அண்டைக்கு சாப்பிடவே கஷ்டமாங்க.. அப்பாட யாரோ ஒரு நண்பன் கப்பல்ல அவுஸ்திரேலியாவுக்கு போக வெளிக்கிட்டாராம் அப்பாவையும் கூப்பிட்டாராம் பெரிய அத்தை சின்னத்தை அம்மம்மா எல்லாரும் அப்பாவை போகச் சொன்னாங்களாம் அம்மா மட்டும் அமைதியாய் இருந்தாங்களாம் ஏன் என்றால் கல்யாணமான நான்கு மாதத்தில் பாவம் அம்மா அவங்க கற்பமா இருக்கிறாங்க என்டு கண்டுபிடிச்சே பத்து நாள்தானாம் அப்போ... அப்பா அடுத்த மாதமே வெளிக்கிட்டாராம் எல்லாருக்காகவும் அம்மாவும் ஒத்துக் கொண்டார்களாம். இப்பவும் அம்மா..,... ஏதோ சொல்லாமல் விழுங்கிக் கொண்டாள் 12 வரும் ஆச்சு இன்னும் அப்பா வரலக்கா அவர் வர ஏதாவது செய்யலாமா?

தேம்பித் தேம்பி அர்த்தனாவின் இயல்பை தூண்டி கண் நிறைக்க கதை சொன்னாள் கீர்த்தி.

அர்த்தனா கீர்த்தியின் கைகளை விடவே இல்லை 12 வயது தோற்றம் இல்லை பார்ப்பதற்கு 16 வயது காண்பிக்கும் தோரணை பிஞ்சு இன்னும் என்ன சொல்லி இடி போடப் போகிறாளோ? என் இதயத்தில் என்று ஏக்கத்துடன் ஒத்துணர்வழித்தாள். கீர்த்திமா அழாதடா நீண்ட நேர அடைமழையின் பின் குடைபிடிப்பதாய் ஓர் இடைநிறுத்தம் அழாதமா என்றாள் அர்தனா? அடுத்த நொடியே அவலக் குரலில் அக்கா என்று எத்தணித்தாள்..... சாமத்தியம் ஆகாட்டால் குழந்தை பிறக்குமா? பெரும் வினா.

ஏன் இந்த மழலைக்கு மனசோரம் பேர் இடியோ? இத்தனை பாரமான ஐயப்பாடு வினாவினாள்? கண்கள் விரிய கைகள் குளிர்ந்து ஈரமாக வெட்கத்துடன் ஏக்கமாய் பார்த்தாள் கீர்த்தி. அர்த்தனா இன்னும் புரிந்து கொண்டாள். பூப்படையாத கீர்த்தி..... அர்த்தனாவின் கைகளை இறுக்கிக் கொண்டாள் உடல் நடுங்கியது சாரலும் தூவானமுமாய் மூக்கு சிந்த உரத்து அழுதபடி அர்த்தனாவின் பிடியை நகர்த்தி தன் இரண்டு கைகளாலும் வாயை இறுக்கி மூடி ஓலமிட்டபடி உரத்த சத்தத்தையும் உணர்வையும் அடக்கி கொள்ள நினைத்து முடியாதவளாய் கொதிநீர் குவளயாய் தெறித்து வெடித்தாள் கீர்த்தி. வகுப்பறை நிறைத்த ஓலம் அர்த்தனாவின் அனுபவத்தில் இப்படி ஒரு துணைநாடியை சந்தித்ததேயில்லை அங்கலாய்த்துப்போன அவள் கீர்த்தியை மார்போடு அணைத்துக் கொண்டாள் முதுகு தட்டி தலைகோதி என்னம்மா ஆச்சு அக்கா கூட இருக்கேன்மா என வார்த்தை வஞ்சம் செய்ய மூர்ச்சை இழந்துவிட்டபடி இடியேறுமரமாய் மலைத்துப் போனாள். பிஞ்சு வெடித்து சிதறுகின்றதே என்ன இது இறைவா என்று விண்ணப்பம் செய்தாள். அழுகையுடன் அக்கா யாரிடமும் சொல்ல மாட்டீங்களே தயங்கித் தவிர்த்து விக்கி விழுங்கினாள் கீர்த்தி .அர்த்தனா நெற்றி நீவி பக்கம் போனாள் பார்வையால் உறுதியளித்து பதிலளித்தாள். நம்புடாமா என்றாள்.

அக்கா என் அம்மாவுக்கு ஒரு நண்பர் அவர் அடிக்கடி வீட்டுக்கு வருவார் ஒரு நாள் அம்மா இல்லாதப்போ அவர் என்ன...... நீள அழுதாள் கைகளால் இறுக்கி வாய்மூடி ஓலமிட்டாள் இறைவா அர்த்தனாவால் அவளை அணைக்க மட்டுமே முடிந்தது. அணையாத தீயை அணைக்க அவளால் கூடாமல் போனது. கீர்த்தி சொற்களை பற்களில் சிக்கி நாக்கில் தடுக்கிக்கொள்ள அணை கடந்த வெள்ளமாய் காட்டாறாகினாள். கீர்த்தியின் ஓலம் அர்த்தனாவுக்கு காட்சியாய் ஓடியது.

வஞ்சகன் தன்னை வக்கிரமாய் சிதைத்ததை சின்னாபின்னம் செய்ததை சொல்லாமலேயே சொல்லி முடித்தாள். அதிர்ந்து வேளம் உண்ட வெள்ளிக் கனி போல் உள்ளீடற்று ஊமையானாள் அர்த்தனா.

குடும்பம் காக்க வெளிநாட்டில் தந்தை நண்பர் வடிவில் வக்கிர தாண்டவங்கள். தாயின் தோழன் பெயரில் தாய்க்கொரு தாலாட்டு இரண்டாம் உடல் துணை. கனி சுவைத்த குரங்கிற்கு பூவின் மேல் ஒரு வெஞ்சம். மாலையாகு முன் பிய்த்து சிதைத்து உதிர்த்து போட்டதோ....

ஆற்றல் இழந்த ஆற்றுப்படுத்துணராய் ஈரமாக்கப்பட்ட கண்ணீர் கசியும் சேலை தலைப்பினால் கீர்த்தியின் முகத்தை துடைத்து வார்த்தையால் தாலாட்டி மடியோடு அவளை சாய்த்து கொண்டாள்.


நீறுபூத்த நெருப்பாய் எப்படி தன்னை காட்டிக் கொண்டாள். நீர் அடி பனிப்பாறையில் மிதந்தும் தெரியாமல் மறைந்தே இருந்தது இவள் மனக்குமுறல்கள். மூச்சுக்காற்றில் அக்கினி வீசியபடி புயலுக்கு அப்பால் அமைதலான கடலாய் விழிகளை இறுக்கி மூடி திறந்த வாயினால் சுவாசித்தபடி வண்டு கலைத்த மகரந்தம் தொலைந்த இடம் தேடும் தென்றலாய் இமைக்கா பார்வையை அவள் மீது குவித்து மடி தாங்கி நின்றாள் அர்த்தனா.

காலைக்கதிர்
Kalaikkathir

# சுகநல நிலையத்துடனான உறவு - ஓர் அனுபவப் பகிர்வு

**இலக்கம் 769, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் திருச்சிலுவைக் கன்னியர் சபையினரின் திருச்சிலுவை சுகநல நிலையம் பணியில் 40 ஆண்டுகளை 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொட்டு நிற்கிறது. நிலையத்தினருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு றூபி ஆண்டு என்று அழைக்கப்படும் 40ஆவது ஆண்டு நிறைவில் இவர்கள் வெளியிட்ட சுகநலம் என்ற சஞ்சிகையில் இருந்து சில முக்கிய ஆக்கங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் வாசக அன்பு நெஞ்சங்களுக்குத் தருகிறோம்.**

**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -**
**(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம். ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம். இயக்குனர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், யாழ்ப்பாணம்)**




திருச்சிலுவைக் கன்னியரின் சுகநல நிலையம் 2022ஆம் ஆண்டில் தமது சுகநலப் பணியின் 40ஆம் ஆண்டு ரூபி விழாவைக் கொண்டாடுகிறது என்பது ஒரு மகிழ்வான செய்தியாகும்.

இந்தத் திருச்சிலுவை சுகநல நிலையம் கடந்த 40 ஆண்டுகளில் பல நூற்றுக்கணக்கான மனிதர்களின் வாழ்வின் உடல், உள நோயுற்ற, துயரமான வேளைகளிலும் வாழ்வின் அவதிப்பட்ட இறுதிக்கணப் பொழுதுகளிலும் தமது அர்ப்பணிப்பு மிக்க, ஆளுமையின் அன்பான, இரக்கமான பதிவைப் பொறித்துள்ளனர்.

திருச்சிலுவைக் கன்னியரும் சுகநலப் பணியாளரும் தமக்கே உரித்தான மெல்லிய புன்சிரிப்பாலும், இனிய வார்த்தைகளாலும், கனிவான அணுகு முறையாலும், அன்பான பராமரிப்பாலும், இடைவிடாத கவனிப்பாலும் மனிதர்களின் நோயுற்ற – இக்கட்டான – வேதனை மிக்க – நேரங்களில் அவர்களுக்கு உடல்,உள,ஆன்மீக ரீதியாகத் துணை நின்றுள்ளனர் என்பது அசைக்கப்பட முடியாத உண்மையாகும்.

திருச்சிலுவைக் கன்னியரின் சுகநல நிலையத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவில் அங்கு பணியாற்றி மறைந்த போன திருச்சிலுவைக் கன்னியர்கள் – பணியாளர்கள் மற்றும் அங்கு தமது வாழ்வின் இறுதிப் பொழுதுகளை அனுபவித்த மரித்துப்போன அனைவரும் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறுவார்களாக.

திருச்சிலுவை சுகநல நிலையத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவில் திருச்சிலுவை சுகநல நிலையத்தில் இன்று இரவும் பகலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் திருச்சிலுவைக் கன்னியர் சபை நிர்வாகிகள், திருச் சிலுவைக் கன்னியர்கள், திருச்சிலுவைக் கன்னியர் சபை டாக்டர்கள், மேலும் அங்கு பணியாற்றும் இதர டாக்டர்கள், தாதியர், பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி உங்கள் பணி மனித நேயம் மிக்கது – மகத்தானது – மக்களுக்குத் தேவையானது – தொடர்ந்து ஆற்றுங்கள் என இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

இது திருச்சிலுவை கன்னியரின் சுகநல நிலையத்துடன் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை, அவை தனிப்பட்டவையாக இருப்பினும் இங்கு பகிர விரும்புகிறேன். எனது தனிப்பட்ட அனுபவப் பகிர்வு என்பதால் அவை என்னைச் சுற்றியே அமைந்திருப்பது தவிர்க்கப்பட முடியாதுள்ளது.

## 1982ஆம் ஆண்டு - முதற் சந்திப்பு

'பாதர் பஸ்ரி' என அன்பாக அழைக்கப்படும் பஸ்ரியாம்பிள்ளை அடிகளார் யாழ்ப்பாணம் மறை மாவட்டத்தின் நிதி முகாமையாளராக யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

நான் பெரிய குருமட மாணவனாக றீஜென்சி என அழைக்கப்படும் மெய்யியற் கல்விக்கும் இறையியற் கல்விக்கும் இடையிலான பங்குப் பயிற்சியில் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் ஆயரின் செயலராக இருந்த பாதர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை அடிகளாருக்கு (தற்போதைய ஓய்வு நிலை ஆயர்) உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

அந்நாட்களில் அருட்சகோதரர்கள், றீஜென்சி பங்குப் பயிற்சியின் போது 06 மாதங்கள் ஆயரின் செயலர் காரியாலய அறையில் தனியாக அமைக்கப்பட்ட மேசையில் அமர்ந்து காரியாலய நேரங்களில் பணியாற்றும் வழக்கம் இருந்தது.

எனது அறை ஆயர் இல்ல பழைய கட்டடத்தின் கீழ் மாடியில் உள்ள இரண்டாவது அறையாகும். மேல் மாடி முதல் அறையில் நிதி முகாமையாளரான பாதர் பஸ்ரி தங்கியிருந்தார்.

அவர் நீரழிவு நோயால் அவதிப்பட்டமையால் அவருக்கு இன்சுலின் ஊசி போட, 144 கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருச்சிலுவைக் கன்னியர் சுகநல நிலையத்தில் இருந்து சிஸ்ரர் கிளேயா சுவானி அவர்கள் ஒவ்வொரு நாளும் காலையில் வருவார். வந்து இன்சுலின் ஊசி போட்டுச் செல்வது வழக்கம்.

ஒவ்வொரு நாள் காலை வேளைகளிலும் எனது பணி பெரிய கோவில்ப் பூசைக்குச் சென்று பூசையில் நற்கருணை வழங்க உதவி செய்வதாகும்.

அப்பணியை முடித்துக் கொண்டு எனது அறைக்கு நான் வரவும் சிஸ்ரர் கிளேயர் ஊசி போட வருவும் நேரம் சரியாக இருக்கும். காலை வணக்கம் சொல்லி விட்டுச் செல்வோம்.

சில நாள்களில் ஏதும் வருத்தத்தினால் நான் தூக்கத்தில் இருந்து எழும்பாவிட்டால் எனது அறை பூட்டப்பட்டிருக்கும். சிஸ்ரர் ஜன்னலைத் தட்டி என்னை எழுப்பி சுகம் விசாரித்து மருந்து தந்து விட்டுச் செல்லுவார்.

அதே நேரத்தில் பெரிய கோவில்ப் பங்குத்தந்தையாக இருந்த ஜே.பி.இ. செல்வராஜா அடிகளார் அனுப்பிய பூசைக்கு உதவும் பணியாளர்களில் ஒருவர் ஏன் நான் நற்கருணை கொடுக்கக வரவில்லை என்று கேட்டு வந்து விடுவார்.

'பிறதர் ரூபன் மரியாம்பிள்ளைக்கு உடம்பு சரியில்லை. சிஸ்ரர் கிளேயா சுவானி வந்து மருந்து கொடுத்திருக்கிறா' – என்று சொல்லி அந்த பூசைக்கு உதவும் பணியாளரை அனுப்பி விடுவார்.

## 1984ஆம் ஆண்டு - இரண்டாம் சந்திப்பு

திருச்சிலுவைக் சுகநலப் பணியாளருடனான எனது இரண்டாவது சந்திப்பு நான் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை கற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஏற்பட்டது.

எனது நெஞ்சில் ஒரு கட்டி ஏற்பட்டிருந்தது. கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் குருமட அதிபராயிருந்த பிலிப் பொன்னையா அடிகள் திருச்சிலுவை சுகநல நிலையத்திற்குச் சென்று காட்டும்படி சொன்னார்.

திருச்சிலுவை சுகநல நிலையத்தில் அப்போது டொக்டராக சிஸ்ரர் இமாக்குளேற் யோசவ் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

டொக்டர் சிஸ்ரர் இமாக்குளேற் யோசவ் அவர்கள் என்னை சோதித்துப் பார்த்து விட்டு சிறிய ஒப்பறேசன் ஒன்று செய்யவேண்டும். அது மிகச் சிறிய ஒப்பறேசன் தான். பயப்பிட வேண்டாம் என்று அழைப்பு விடுத்தார்.

நான் வலி தாங்க மாட்டேன். நோவின்றி மெதுவாகச் ஒப்பறேசன் செய்ய வேண்டும் என்றேன். அதற்கு டொக்ரர் வெட்ட வேண்டிய இடத்திற்கு மட்டும் மயக்க ஊசி போட்டு நோகாமற் செய்யலாம் என்று ஒப்பறேசன் எனப் பயந்து இருந்த எனக்கு மனத் துணிவு தந்தார்.

இருநாள் வைத்தியசாலையில் தங்க வேண்டும் என டொக்டர் சொன்னபோது நான் ஒரு போதும் வைத்திய சாலையில் தங்கியிருக்க வேயில்லை. நான் ஒழுங்காக வந்து மருந்து கட்டுவேன். என்னை உடன் குருமடம் போக அனுமதியுங்கள் என்று ஒருவாறு கதைத்து ஒரு மாதிரி உத்தரவு பெற்றேன்.

ஒப்பறேசன் முடித்து மருந்து ஒன்று விட்ட ஒரு நாள் கட்டியும் புண் மாற நீண்ட நாள்கள் எடுத்தன. குருமட அதிபராயிருந்த பிலிப் பொன்னையா அடிகள் ஒரு தடவை எனது சுகம் விசாரித்த போது டொக்டர் சிஸ்ரர் ஒரு சிறிய ஒப்பறேசன் விரைவாக மாறிவிடும் என்றுதான் சொன்னார்கள். ஆனால் புண் மாற நீண்ட நாட்கள் எடுக்கின்றன என்று நான் சொன்ன போது டொக்டர் சிஸ்ரர் உம்மைப் பயப்பிடுத்தாமல் துணிவாய் ஒப்பறேசனை சந்திக்கத்தான் அப்பிடிச் சொல்லி இருக்கிறார் என்றார்.

அப்போதுதான் டொக்டர் சிஸ்ரர் இமாக்குளேற் யோசவ் அவர்கள் உளவியல் ரீதியாக என்னைத் திடப்படுத்தவே அவ்வாறு சொன்னார் என்பதை உணர்ந்தேன்.




அப்போதுதான் நான் டொக்டர் சிஸ்ரர் இமாக்குளேற் யோசவ் அவர்கள் எனது வருத்த காலத்தின் மிகவும் இரக்கமாகவும் அன்பாகவும் நடந்து கொண்ட விதத்தையும் மனத்திடம் தந்து என்னைப் பராமரித்துக் குணமாக்கியதையும் உணந்தேன்.

இந்த மனப்பதிவை மனதில் வைத்துத்தான் நான் குருவாகிய பின்னர் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி போது (1997 – 2007) ஒரு சந்தர்ப்பத்தில் அவரின் வைத்தியப் பணியைப் பற்றி பின்வருமாறு எழுதினேன்:–

டாக்ரர் சிஸ்ரர் இமாக்குளேற் யோசவ் அவர்கள் வருத்தம் என்று வருவோரை அன்பான புன்சிரிப்புடன் வரவேற்று – கையைப் பிடித்து பார்த்து – என்ன நடந்து என்று இனிமையான மெல்லிய குரலில் மெதுவாக கேட்டு – நோயாளிக்கு மன உறுதி தரும் பாணி சிறப்பானது.

இவ்வாறு நோயாளிக்கு மருந்து கொடுக்கும் முன்னரே தனது புரிந்துணர்வு மிக்க அன்பான அணுகு முறையால் குணமாக்கும் வல்லமை பெற்றறவர். – என எழுதினேன்.

அந்த வசனங்கள் சரியானவை எனப் பல தடவைகள் பலர் சொன்ன அனுபவங்களை வைத்துப் பின்னர் உறுதிப்படுத்தினேன்.

பாதுகாவலன் பத்திரிகையில் நான் எழுதிய இந்த பதிவு தினத்தை இங்கு சரியாகக் குறிப்பிட முடியவில்லை.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தம் நாளை திங்கட்கிழமை கைச்சாத்து!



புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற இம்முறை இலங்கையில் இருந்து 3 ஆயிரத்து 500 பேருக்கு அனுமதி கிடைத்துள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புனித ஹஜ் யாத்திரை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதற்காக சவுதி அரசாங்கத்துடன் எதிர்வரும் நாளை (திங்கட்கிழமை) உத்தியோகபூர்வமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த முறையைபோன்று வயது எல்லை தொடர்பிலான வரையறைகள் இம்முறை இல்லையெனவும் கொரோனா தடுப்பூசி தொடர்பிலான வரையறைகளும் இம்முறை தளர்த்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு வவுனியாவில்!



வவுனியா மூன்றுமுறிப்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட அமைப்பாளர் ச.நிரேஷ்குமார் தலைமையில் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் புத்திக்க பத்திரன, தேசிய அமைப்பாளர் உமாசந்திரப்பிரகாஸ், வவுனியா அமைப்பாளர் பிரியதர்சினி ரசிக்கா, முன்னாள் மாவட்ட அமைப்பாளர் கருணதாசா, அமைப்பின் உறுப்பினர்கள் ஆதரவாளர் கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பணத்தை அச்சடித்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் முதல் நாடாக உலகிலேயே இலங்கை மாறும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கிண்டல்



பாரிய பொருளாதார நெருக்கடியின் போது பணத்தை அச்சடித்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் முதல் நாடாக இலங்கை மாறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தெரணியகல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துவெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் 2 ஆயிரத்து 500 பில்லியன் ரூபா நாணயத்தாள்கள் அச்சிடப்பட்ட போதிலும், அவை அன்றாட செலவுகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புகுழு ஏற்பாட்டில் முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.




நேற்று (சனிக்கிழமை) முல்லைத்தீவு வள்ளிபுனம் மாலை நேர கல்வி நிலையத்துக்கு முன்பாக இந்தகவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை இங்கு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடவேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்ததோடு ஜனாதிபதியுடன் இடம்பெறுகின்ற பேச்சுகளில் அனைத்து தமிழ் உரிமைக்காக பாடுபடும் கட்சிகளின் கருத்துக்களை உள்வாங்கி செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்கு சீனாவின் டீசல் இன்று முதல் கிடைக்கும்!


சீனாவால் வழங்கப்பட்ட 6.98 மில்லியன் லீற்றர் டீசல் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சால் உருவாக்கப்பட்ட புதிய செயலி மூலம் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு ஹெக்டேயரில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு இந்த எரிபொருளை இலவசமாக வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

# போதைப்பொருளை அடக்குவதற்கு உயரதிகாரம் கொண்ட செயலகம்!

## ஸ்தாபிக்க நடவடிக்கை என்கிறார் ஜனாதிபதி



இலங்கையில் போதைப்பொருள் தடுப்புக்காக பூரண அதிகாரம் கொண்ட செயலகத்தை நிறுவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு திணைக்களத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

போதைப்பொருள் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியை பலப்படுத்துவதற்காக இந்த விசேட அலுவலகம் நிறுவப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட சட்டத்தின் கீழ் அது தொடர்பான அதிகாரங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் நாட்டுக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கும், விற்பனையாளர்களை சிக்க வைப்பதற்கும் தனியான பாதுகாப்புப் பிரிவொன்றை ஸ்தாபித்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அலுவலகம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.இதற்கமைய, இது தொடர்பான அதிகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் தலைமையில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# யாழ்ப்பாண மாவட்ட மக்கள் மாற்றம் எதிர்பார்க்கின்றனர்!

## மைத்திரி குணரத்ன தெரிவிப்பு

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் வாழைப்பழச் சீப்பு சின்னத்தில் தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளது.



நேற்று (சனிக்கிழமை) ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் செயலாளர், சட்டத்தரணி மைத்திரி குணரத்ன யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து கட்சி நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிலரே யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் செயற்பட்டனர். ஆனால் மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை முழுவதும் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அனைத்து பொருளாதார நிலையங்களுக்கும் 53 ரூபாவிற்கு முட்டைகள் வழங்கப்படுமாம்!

## அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் உறுதி

கொழும்பில் உள்ள அனைத்து பொருளாதார நிலையங்களுக்கும் 53 ரூபாவிற்கு முட்டை வழங்கப்படும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அதன் தலைவர் சரத் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நேற்று (சனிக்கிழமை) 8லட்சம் முட்டைகள் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு இலவசமாக முட்டை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒரு டொலருக்கு 2 ரூபா என்ற ஊக்கத்தொகை நிறுத்தப்பட்டது!

வெளிநாடுகளில் பணிபுரிபவர்களால் அனுப்பப்படும் ஒவ்வொரு டொலருக்கும் 2 ரூபா ஊக்கத் தொகையை இலங்கையின் மத்திய வங்கி நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முறையான வங்கி வலையமைப்புக்களின் மூலம் பணம் அனுப்புவதை ஊக்குவிக்க 2021ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் இந்த ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சட்டவிரோதமான ஹவாலா அல்லது உண்டியல் முறைகள் மூலம் பணம் அனுப்பியதை அடுத்தே இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் எதிர்பார்த்தபடி வெளிநாடுகளின் தொழிலாளர்கள் பணத்தை வங்கிகளின் ஊடாக அனுப்பவில்லை.

இதனையடுத்தே இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு அமெரிக்க டொலர் அனுப்புதலுக்கும் வழங்கப்படும் 2 ரூபா ஊக்கத்தொகையை நிறுத்துமாறு வங்கிகளை மத்திய வங்கி கேட்டுக் கொண்டதாக வங்கி ஒன்றின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## நிதர்சனங்கள்

அங்கம் - 233

### துருக்கியின் ஒட்டோமன் பேரரசு

யூகோஸ்லாவியாவில் இணைந்திருந்த தேசங்கள், தனி நாடுகளாக 1980 இல் பிரிவினை கோர், அவற்றையெல்லாம் யூகோஸ்லாவியாவின் எல்லைக்குள் அமைந்தவை, அதன் இறைமையை மீற முடியாது என்றே ஐ.நாவும் சர்வதேசமும் கூறி வந்தன. ஆனால் இந்த நாடுகள் அப்படி இணைந்த போது, சர்வதேசம் தங்கள் நலங்களுக்காக அந்த வாதத்தை அப்போது வைக்கவில்லை. ஏனெனில் இவையெல்லாம் முன்னர் துருக்கியின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்த ஒட்டோமன் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்தன. அந்தப் பேரரசு ஆப்பிரிக்காவின் எகிப்து வரையான பகுதிகள், மத்திய கிழக்கு நாடுகள், கிழக்கு ஐரோப்பாவின் பல தேசங்கள் என வியாபித்து, மேற்கு ஐரோப்பாவின் ஆஸ்திரியா எல்லை வரை வியாபித்திருந்தது. ஒட்டோமன் பேரரசை நிர்மூலமாக்கக் கங்கணம் கட்டி இருந்த மேற்கு ஐரோப்பிய அரசுகள் எல்லை வரையறை பார்க்காது, தேசங்களாக நடைமுறையில் இருந்து ஒவ்வொரு பகுதிக்கும் பிரிந்து நாடுகளாக உதவி செய்தன. அப்படி பிரிந்தவையே யூகோஸ்லாவியா போன்ற நாடுகளாகவும், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் கிழக்கு ஐரோப்பாவின் பல பகுதிகள் ரஷ்ய ஆதிக்கத்தின் கீழும், மற்றவை அமெரிக்கா, மேற்கு ஐரோப்பாவின் கண்காணிப்பின் கீழும் வந்தன. அப்படி இணைந்தவை சேர்ந்தே ஏற்படுத்திய நாடுகளின் எல்லைக்குட்பட்டவையானதால் வெளிப்புற சுயநிர்ணயத்திற்கு அருகதை அற்றவை என்ற சட்ட வியாக்கியானங்கள் எழுப்பப்பட்டன. ஆயினும் ரஷ்யாவைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் இவை தனி நாடுகள் ஆக்கப்பட்டன. அந்த பிரிவினைகளின் அடிப்படைகளை ஏற்றுக் கொள்ளாத ரஷ்யா அதனால் கிரிமியா, பெலாரஸ், உக்ரைன் நாடுகள் தங்களுக்கான பிரதேசங்கள் எனவும் அவை நேட்டோவின் ஆளுகைக்குள் வருவதை எதிர்த்து தற்சமயம் போரை நடத்துகிறது.

### எரித்திரேயாவும் குர்தீஸ் மக்களும்

இந்த அரசியல் மிக வெளிப்படையாக எடித்திரியா எத்தியோப்பியாவிடம் இருந்து விடுதலை பெற நடத்திய போரில் பார்க்கலாம். எரித்திரியா மக்களின் விடுதலை முன்னணி என்ற இயக்கம் இந்தப் போரை நடத்தியது. அச்சமயம் எதியோப்பியாவின் மன்னர் ஹெய்லி சலாசியை ஆதரித்த அமெரிக்கா, அவர்களை பயங்கரவாதிகளாக பட்டியலிட்டு அந்த மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கிடையாது என மறுதலித்தது. ஆனால் சோவியத் அரசோ அவர்கள் ஆப்பிரிக்காவில் காலனித்துவத்தை எதிர்த்து சோலிசம் அங்கு



ருவாண்டா இனப்படுகொலையின் மிச்சங்கள்

மலர போராடும் வீரர்கள் என ஆதரவு தந்து வர, ராணுவ தளபதி மெங்கிஸ்டு மன்னர் சலாசியை பதவி இறக்கி அங்கு சோவியத் ரஷ்யாவுக்கு சார்பான அரசை நிறுவியதும், சோவியத் ரஷ்யா தனது ஆதரவை எத்தியோப்பியாவின் சார்பாக திருப்பி, எரித்திரியருக்கு சுயநிர்ணய உரிமை இல்லை என வாதிட்டது. அந்தச் சமயத்தில் தனது அரசியல் ஆதாயங்களுக்காக அமெரிக்கா எரித்திரிய போராளிகள் பயங்கரவாதிகள் அல்லர், என மீளாய்வு செய்து, கம்யூனிசத்துக்கு எதிரான போராளிகள் இவர்கள் என வர்ணித்து, எரித்திரியவின் விடுதலைக்கு உறுதுணையாக நின்றது.

இதே நிலைமைகள்தான் ஈராக்கில் வாழ்ந்த குர்தீஸ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கும் நடந்தன. சதாம் அங்கு அதிகாரத்தில் பலம்பெற, அதனைக் கட்டுப்படுத்த விரும்பி, குர்தீஸ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தந்த அமெரிக்கா, பின் ஈரானுடன் நின்று பிடிக்க தேவை வந்தபோது சதாமை ஆதரித்து குர்தீஸ் மக்களைக் கைவிட்டது. அந்த நாள்களில் சதாமும் குர்தீஸ் மக்களின் வாழ்வாதாரங்களை பெருமளவு அழித்தாலும், பின் அமெரிக்கா சதாமை அழிக்கப் புறப்பட்டபோது அதே குர்தீஸ் போராளிகளைத்தங்களதுபடைகளுக்குச் சேர்த்துப் போராடக் கோரி, அவர்களது சுயநிர்ணயத்தை ஆதரித்தது. சதாமை அழித்தபின் குர்தீஸ் போராளிகளைக் கைவிட்டு, பின் அவர்களும் அரசியல் கொள்கைகளுக்காக ஆயுதம் தாங்குபவர்கள் என இரட்டைக் கோபுர தாக்குதல்களின் பின் பட்டியல் இட்டு உள்ளது. அமெரிக்கா முன்னெடுத்த அல்லது சர்வதேச ஒழுங்குமுறைக்காகவே அது உலகில் பல பாகங்களிலும் தமது விடுதலைக்காகப் போராடிய ஆயுதம் தரித்த குழுக்களை பயங்கரவாத பட்டியலில் அடைத்தது. அதில் அகப்பட்டவர்கள்தான் விடுதலை புலிகளும்.

### கோசாவா மக்களும் ஈழத் தமிழரும்

கோசாவின் மக்கள் விடுதலை அடைய மனிதாபிமான, மனித உரிமை மீறலுக்கான உதவிகள் தரப்பட்டமை போல, ஏன் சர்வதேசம் தமிழ் மக்களை நடத்தவில்லை என்ற கேள்விகள் எழுந்தன. அப்படியான எதிர்பார்ப்பு புலம்பெயர் மக்களின் பெரும் பகுதிகளிடையே இருந்தது. அப்படியான எதிர்பார்ப்புகளை போரின் கடைசி கட்டங்களில் தமிழ் மக்கள் வைத்திருந்தனர். அது நடக்காததும் யதார்த்தம். ஏனெனில் பழையபடி சர்வதேச சம்பிரதாயங்கள் அதில் ஈடுபட்டமை முக்கியமானது. அந்த எதிர்பார்ப்புகளை பலமாக தூண்டியவர்கள், இதனை விடுதலைப் புலிகளின் சார்பாக ஆராய்ந்து சமர்ப்பணங்கள் வைத்த அவர்களின் புலம்பெயர் புத்திஜீவிகள். அவர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தந்த அழுத்தங்களுக்கு பணியாமல், எப்படி கோசாவர் விடுதலை இராணுவம் தனி நாட்டுக்குத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கின்றதோ, அதேபோல இந்தியாவின் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாமல், விடுதலை புலிகள் தமிழீழத்திற்காகப் போராடுகிறார்கள், யூகோஸ்லாவியாவின் வளங்களை பாவிக்கவும், அதன் சில முஸ்லிம் அரசியல்வாதிகளைத் தம்பக்கம் ஆதரவு தருவதற்காகவும், மேற்கு ஐரோப்பிய நாடுகள் கோசாவா மக்களுக்கு உள்ளக சுயநிர்ணயத்தில் சுயாட்சியும் மூன்று வருடங்களின் பின் முழு சுதந்திர நாடாகலாம் என்பது போன்ற கருத்துக்களை கொண்டு ரம்பூலியற் என்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. நேட்டோவின் தாக்குதல்கள் காரணமாக, யூகோஸ்லாவியா அரசு இதற்கு இணங்கினாலும், கோசாவர் விடுதலை இராணுவம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தங்களது தனி நாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தை முடக்கவே இந்த ஒப்பந்தம் ஏற்படுகிறது என கோசாவர் விடுதலை இராணுவம் அதனை நிராகரித்தது. விடுதலைப் புலிகளின் புத்திஜீவிகளும் அதையே சுட்டிக்காட்டினர். இந்தியாவும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி இணைந்து வருவார்கள் என தெரிந்து, அவர்களை தங்கள் நலத்திற்காக வான் வழியில் வந்து உணவு பொட்டலங்களை எறிந்து, ஸ்ரீலங்காவைப் பயமுறுத்தி, இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, இந்தியப் படைகளை நாட்டுக்குள் உள்ளீடுசெய்து, தனிநாட்டுஇலட்சியத்தில் விடாப்பிடியாக இருந்த விடுதலைப் புலிகளை முடக்கி, தங்களது நலன்களின் வட்டத்துக்குள் கொண்டு வருவது என்பதற்காகவே இவ்வளவும் என்பது அவர்களது வாதம்.

சர்வதேசம் இரண்டு போர்களையும் சமநிலையில் பார்க்க வேண்டும் என்பது அவர்களதுகோரிக்கை. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்பது போல நடைமுறை யதார்த்தங்களையும் கவனித்திருக்க வேண்டும்.

சர்வதேசங்களின் முத்திரை பதிப்புகளைபார்க்கவேண்டுமானால்ரூவாண்டா, ஸ்ரீலங்கா, கோசாவா பின் நடந்தவற்றை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். கோசாவாவிற்கான யுத்தம் 1998 இல் தொடங்கியது. ஆனால் ஸ்ரீலங்காவின் இனக் கலவரங்கள் 1958இல் தொடங்கி தொடர்ந்த வன்முறை போராட்டமும் 45 வருடங்களுக்கு நடந்திருந்தன. அதில் முள்ளிவாய்க்காலுக்கு முன் 70 ஆயிரம் மக்கள் இறந்திருந்தார்கள் என கணக்கிடப்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் இடம் பெயர்வுகளுக்கும் அகதி நிலைகளுக்குமானார்கள். தொடர்ந்து மனித உரிமை மீறல்கள் நடந்தன. ஏப்ரல் 1998 இல் ரூவாண்டா நாடு அங்கு இடம்பெற்ற இனப்படுகொலையின் ஐந்தாவது அண்டு ஆண்டு நினைவு கூரலை நடத்தியது. மூன்று மாதங்களில் 8 லட்சம் மக்கள் அங்கு கொல்லப்பட்டிருந்தனர். அந்த இனப்படுகொலையின் உருவாக்கத்தையோ, பின்னணிகளையோஐ.நாவோ, சர்வதேசமோ அறியாமல் இல்லை. ஆனால் கோசாவாவில் நேட்டோ இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய போது அங்கு முன்னைய 13 மாதங்களில் 2000 பேர் கொல்லப்பட்டு, 90 ஆயிரம் பேர் அகதிகளாக ஆகி இருந்தனர். நேட்டோவின் அந்த அதிரடித் தலையீடு சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என பல சர்வதேச சட்டத்தரணிகளும் புத்திஜீவிகளும் ஐ.நா. உட்பட கருத்துக்கள் தெரிவித்தனர். ஐ.நாவின் அனுமதியின்றி நேட்டோ நாடுகள் தன்னிச்சையாக நடந்து கொண்டன. சர்வதேச புவியியல் நடப்பும், அதற்கான அமெரிக்காவின் வகிபாகமும், கிழக்கு ஐரோப்பாவின் ஆளுமைகளும்தான் இவற்றுக்குப் பின்னணியில் நின்றன. இவற்றினால் ரூவாண்டா நாட்டின் ஜனாதிபதி ஐ.நாவில் கோசாவாவைப் பற்றி உதாரணம் காட்டி, தாங்கள் ஆப்பிரிக்காவின் கறுப்பினத்தவர்கள் என்பதனாலேயே சர்வதேசம் தங்களது மக்களின் இனப்படுகொலையை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது என்றார். சர்வதேசத்தில் ரூவாண்டாவின் இனப்படுகொலை ஏற்படுத்திய தாக்கங்கள், சோமாலியா, தென் சூடான் போன்ற நாடுகளில் நடந்த மனித உரிமை மீறல்களையும், அந்த நாடுகளின் கட்டமைப்புகள் சிதைடைவதையும் தடுக்கும் முகமாகவும் ஐ.நா. சில கட்டமைப்புகளுக்கு ஊடாக சுயநிர்ணய அடிப்படையில் அவைக்குத் தீர்வுகளை ஏற்படுத்தியது.

(வளரும்....)

காலைக்கதிர்
Kalaikkathir

# நேற்றைய தமிழரசு மத்திய குழுக் கூட்டத்தின் காட்சிகள்









## உண்ணாவிரதப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது கைது செய்யப்பட்டவர்கள் எனக் கூறப்படும் 38 இலங்கையர்கள், கர்நாடக மாநிலத்தின் மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை அடுத்து, அவர்களின் கடவுச்சீட்டுகள் சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தினால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றிரவு அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதால், நாடு திரும்புவதற்காக இந்திய அரசின் அனுமதிக்கு தாங்கள் காத்திருக்கின்றனர் என அவர்கள் தெரிவித்தனர்.

## தமிழர்களை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் கூறியவை வருமாறு:-

நேற்றைய தினம் சென்னையிலே மலையக முன்னணியின் ஏற்பாட்டில் தொல் திருமாவளவன் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் பங்களிப்புடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் மற்றும் மலையக முன்னணியின் தலைவர் இராதகிருஷ்ணன் பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்நிலையில் இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரிய பத்திரிகையாளர் சந்திப்பாக அது காணப்பட்டது. அவர்கள் அனைவரும் அந்த சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது 13 ஆம் திருத்தச்சட்டம் தமிழ்மக்களுக்குரிய தீர்வு அல்ல என வலியுறுத்தினர்.

எம்மைப் பொறுத்தவரை சுமந்திரனின் இக் கருத்து ஆச்சரியமல்ல. சுமந்திரன் திட்டமிட்டு தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டவர். ஆனால் திருமாவளவன், மகேந்திரன் போன்றவர்கள் ஈழப்போராட்டத்தின் போது ஈழத்தமிழர்களுக்காக உறுதியாக குரல் கொடுத்தவர்கள். போராட்ட காலத்திற்கு முன்னர் இவர்கள் இருவரின் வாயால் கூட 13 ஆம் திருத்தச்சட்டமும் மாகாணசபை முறைமையும் தீர்வு என்று உச்சரித்ததை நான் அறியவில்லை.

அந்தவகையில் அவர்கள் இந்த 13 ஆம் திருத்தச்சட்டத்தின் நடைமுறையாக்கத்துக்கு மத்திய அரசை கோரும் கருத்தானது, எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கின்றது. மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகர் சந்திரசேகரன் ஐயா ஈழப் போராட்டத்தை மிகவும் நேசித்தவர். அவர்களின் கட்சியினரும் தனித்துவமாக ஈழத்தமிழர்களுக்காகச் செயற்பட்டவர்கள். அப்படிப்பட்ட கட்சியில் இருந்து வந்த இராதாகிருஷ்ணன் 13ம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தும் செயற்பாடானது வெறுப்புக்குரியது.

13 ஆம் திருத்தச்சட்டம் தமிழர்களுக்கு இறுதி தீர்வு என்ற இந்தியாவின் மத்திய அரசின் நிலை இன்றுவரை தொடர்கின்றது. இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப. புலிகள் 13 ஆம் திருத்தச் சட்டத்தை தீர்வுக்கான ஒரு ஆரம்பப் புள்ளியாகக் கூட கருத மறுத்தனர். அதனால் தான் 30 வருடம் போராட்டம் நடைபெற்றது. அவ்வாறு இருக்கையில் அதனை ஆரம்பப் புள்ளியாகக் கருதினால் தமிழர் தரப்பு ஒற்றையாட்சிக்குள் முடங்கிவிடும்.

இதுவரைக்கும் தமிழர் சரித்திரத்திலே ஒற்றையாட்சி முறை கொண்டு வந்த நிலையில் தமிழர் தரப்பு நிராகரித்ததாலேயே இன்றுவரை இலங்கையில் இனப்பிரச்சினை காணப்படுகின்றது. 13 ஐ ஆரம்பப்புள்ளியாக வலியுறுத்தும் தமிழர் தலைவர்கள் என கூறுபவர்கள் அரசின் அடிமையாக செயற்பட்டாலும் இன்று தமிழர் போராட்டத்திற்கு பக்கபலமாக செயலாற்றிய தமிழகத் தலைவர்கள் இன்று நிலை மாறியுள்ளனர்.

தமிழக தலைவர்கள் இன்றுதான் தமிழர் விடயத்தில் மிகவும் அவதானமாக செயற்படும் காலகட்டமாக உள்ளது. அதிலும் திருமாவளவன், மகேந்திரன் போன்றோர் இவ்வாறு செயற்படுவது தமிழர்களின் விடயத்தில் ஏமாற்றமளிக்கிறது. அவர்களிடம் கெஞ்சிக் கேட்கின்றோம். ஒற்றையாட்சிக்குள் முடக்கும் 13 ஆம் திருத்தச்சட்டத்திற்கு ஆதரவளிக்காது கடந்த 35 வருடமாக தமிழர் நலன் சார்பில் எவ்வாறு செற்பட்டீர்களோ அந்த நிலையில் உறுதியாக இருக்க வேண்டும்.

புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவுகள் எவ்வாறு தமிழர் தரப்பின் மீது கரிசனையுடன் உள்ளனரோ அதுபோலவே தமிழக தலைவர்களும் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். மாறாக 13ஐ வலியுறுத்த முற்படும் போது தமிழர்களின் அபிலாசைகளை மத்திய அரசின் ஒற்றையாட்சி முறைக்குள் உள்ளடக்குவதற்கு சோரம் போவதாக அது அமையும். தமிழகத் தலைமைகளுக்கு போராட்ட காலத்தை விட தற்சமயம் உரிமைசார் விடயங்களில் பேரம் பேசக்கூடிய ஆற்றல் அதிகரித்துள்ளது. எனவே போராட்ட காலத்தை விட தமிழர்களுக்கு உங்களின் ஆதரவை பன்மடங்காக வழங்க வேண்டும்

தயவு செய்து நாங்கள் தமிழக தலைமைகளிடம் கேட்டுக்கொள்வது ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்கும் நிலைப்பாட்டுக்கு துணைபோகாது, ஈழத் தமிழர் நலன் சார் விடயத்தில் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும்.

கடந்த கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் துணை செயலாளர் நாயகம் விக்னராஜா அம்மையார் இலங்கைக்கு விஜயம் செய்தார். அதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விக்னேஸ்வரனின் சந்திப்பை மையப்படுத்தி ஜனாதிபதி ரணில்.விக்கிரமசிங்க இனநல்லிணக்கம் இலங்கையில் காணப்படுகின்றது என வெளிநாடுகளுக்கு எடுத்து காட்டியுள்ளார். இவ்வாறு இருக்கையில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் முன்னேற்றமில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்திரன் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும். - என்றார்.

## இலங்கைத் தமிழருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை வாழ்ல்ல் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு திட்டத்தில் அந்த மக்களின் சார்பாக இந்தியாவே முன்னின்று செயற்பட்டது. எனவே அரசமைப்பு ரீதியிலான தீர்வுதிட்ட விடயத்தில் இலங்கை தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானதொன்றாகும்.

தற்போது அரசாங்கத்திற்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிற்கு விஜயம் செய்வதற்கு முன்னரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றினேன்.

பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னரான ஒரு கால வரையறைக்குள் தீர்வுதிட்டத்தை அடைவதற்கான அரசுடனான பேச்சுவார்த்தைகளில் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கலந்து கொண்டு வருகின்றோம். முழுமையான அதிகாரபகிர்வு நோக்கிய தீர்வு திட்டத்தில் எமது முழுமையான ஒத்துழைப்பை அரசாங்கத்திற்கு வழங்குவோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதுவே பெரும் சிக்கலாகும். எனவேதான் குறைந்தது அந்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்துவதுடன், இதற்காக இந்தியாவின் ஒத்துழைப்பினையும் கோருகின்றோம்.

அதேபோன்று கால தாமதமின்றி மாகாணசபைத் தேர்தலை நடத்தவும், எந்தவொரு தேர்தலையும் ஒத்தி வைக்கக் கூடாது என்றும் அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கு விரோதமானதாகும். எனவே இலங்கை வாழ் தமிழர்களுக்காக இந்தியா துணை நிற்க வேண்டும். - என்றார்.

சென்னை வர்த்தக மையத்தில் இடம்பெற்ற 9ஆம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டிலும் எம்.ஏ.சுமந்திரன் பங்குபற்றினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கை மீட்க புறப்பட்டவர்கள் மண் அகழும் செயற்பாட்டில்!

## ஞா.சிறிநேசன் காட்டம்

கிழக்கை மீட்கப்போகின்றோம் என்று கூறிக்கொண்டு இன்று மண் அகழும் செயற்பாடும் காணி அபகரிப்பு செயற்பாடுகள் மட்டுமே முன்னெடுக்கப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்க அதிகாரிகள் இவ்வாறானவர்கள் மேற்கொள்ளும் காணி அபகரிப்பகளை தடுத்து நிறுத்தமுடியாதவர்களாக வுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

இன்றைய காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துப் பார்த்தால் கடந்த திங்கட்கிழமை காந்தி சதுக்கத்தில் ஓர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கைக்குழந்தைகளோடு தாய்மார் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

மண்முனை– வடக்குப் பிரதேசம் காணித் தட்டுப்பாடு உடைய பகுதியாகும். மக்களுக்குத் தேவையான காணிகளை வழங்குவதிலே சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரதேசத்திலிருந்து இங்கிருக்கின்ற அரசியல் அதிகாரம் பெற்ற அமைச்சர்கள் காணிகளை அபகரிப்பதாக அவர்கள் தமது ஆர்ப்பாடத்தின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இப்போது கிழக்கை மீட்கின்ற செயற்பாடு எனச் சொல்லிக் கொண்டு மண் அகழ்கின்ற செயற்பாடுகளும், காணிகளை அபகரிக்கின்ற செயற்பாடுகளும்தான் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன.

எனவே அரச தரப்பில் இருக்கின்ற நிர்வாகிகள் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறார்களா? என்ற கேள்வி எழுகின்றது.

மக்களுக்குச் சேர வேண்டிய காணிகள் தனிப்பட்ட அதிகாரக் குவிப்பில் இருக்கின்றவர்களுக்கு வழங்கப்படுவதென்பது மக்களை ஏமாற்றித் தாங்கள் பலன்களை அடைந்து கொள்கின்ற ஒரு செயற்பாடாகவே உள்ளது.

அன்றைய காலகட்டத்தில் மண் என்பது பாரிய வாகனங்கள் மூலமாக ஏற்றப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது. தற்போது ரயில் மூலம் மண்வளம் சூறையாடப்படுகின்றது. இந்நிலையில் கிழக்கை மீட்பதென்பது காணிகளை அபகரித்துக் கொண்டு மண் வியாபாரம் செய்யும் செயற்பாடுதானா? என்று கேட்க வேண்டியிருக்கின்றது.



மாவடி ஓடை, புளுட்டுமான்ஓடை, மண்முனை – வடக்குப் பிரதேசம், கிரான் பிரதேச செயலகம், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலகம் போன்ற இடங்களில் காணப்படுகின்ற காணிகள் அபகரிக்கப் படுகின்றன என மக்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் மக்களை ஏமாற்றி நீங்கள் செய்த அரசியல் போதும். அதற்குரிய பதில்களை வழங்குவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். – என்றார்.

# அமைச்சர் மனுஷ நாணயக்காரவிற்கு எதிராக சபாநாயகரிடம் முறைப்பாடு செய்ய தீர்மானம்!



தொழிலாளர் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவிற்கு எதிராக சபாநாயகரிடம் முறைப்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மனுஷ நாணயக்கார கடந்த டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றின் போது கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைகளையும் கோப் குழுவின் அதிகாரங்களையும் ஆட்சேபனைக்கு உட்படுத்தி, விமர்சனங்களை முன்வைத்தார் என நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நடைபெற்ற கோப் குழு கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன், பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் கருத்து தவறான முன்னுதாரணம் எனவும், இதனூடாக கோப் குழுவை இழிவுபடுத்துவது தெளிவாகியுள்ளதால், அது தொடர்பில் கடும் அதிருப்தியை கோப் குழு வெளியிட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் நாயகமும் தனது கவலையை தெரிவித்துள்ளார்.

# யுவதிகளை தகாத தொழிலிலீடுபடுத்தும் பிரபல ஹோட்டல் கண்டியில் சிக்கியது!

கண்டியில் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட ஹோட்டல் என்ற போர்வையில் பிரபல பெண்கள் கல்லூரிக்கும் அருகில் தகாத தொழில் நடத்தும் விடுதி ஒன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது நபர் ஒருவருடன் 22 வயதுடைய யுவதியொருவர் கண்டி ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடத்தில் யுவதி ஒருவருடன் அறை வசதி செய்து தருவதற்காக 15 ஆயிரம் ரூபாவிலிருந்து பணம் அறவிடப்பட்டுள்ளதாக பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்டி பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமில் ரத்நாயக்க மற்றும் கண்டி பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் கண்டி பொலிஸ் லஞ்ச ஒழிப்பு பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க உள்ளிட்ட குழுவினர் முகவர் ஒருவரை நியமித்து சோதனை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த முகவர் அந்த இடத்திற்குச் சென்று 5 ஆயிரம் ரூபாவை செலுத்தி அறையை முன்பதிவு செய்ததையடுத்து, ஹோட்டலின் முகாமையாளர் முகவருக்கு தொலைபேசியில் அறிவித்து, குறித்த யுவதிகளை விடுதிக்கு அழைத்து வந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகாமையாளரின் கையடக்கத் தொலைபேசியில் யுவதிகளின் படங்களைக் காட்டி, சேவையைப் பெற வருபவர் செலவழிக்கும் தொகைக்கேற்ப யுவதிகள் வழங்கப்படுவதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சுற்றிவளைப்பின் போது முகாமையாளரால் அழைத்து வரப்பட்ட யுவதி கண்டி பிரதான பாடசாலை ஒன்றில் பயின்ற 22 வயதுடைய யுவதி என பொலிஸார் தெரிவித்தனர். அந்த யுவதிக்கு, முகாமையாளர் 10 ஆயிரம் ரூபா விலை நிர்ணயம் செய்திருந்தார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சினோபார்ம் தடுப்பூசியை நான்காவது தடுப்பூசியாக பயன்படுத்த தீர்மானம்!

சினோபார்ம் தடுப்பூசியை நான்காவது தடுப்பூசியாக பயன்படுத்த இலங்கை சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் பைசர் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தாலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவக்கூடிய அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் இதுவரை கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ்களை பெறாதவர்கள் சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெறுமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது இலங்கையில் 10 லட்சத்து 80 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசி டோஸ்கள் சுகாதார அமைச்சில் இருப்பதாக இலங்கை தொற்று நோயியல் பிரிவின் புதிய தலைமை தொற்று நோயியல் நிபுணரான வைத்தியர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 60 லட்சம் பேர் இதுவரை பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சியில் கடலட்டை பண்ணையாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு முன்னெடுப்பு!



83 கடலட்டை பண்ணையாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க மண் டபத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்டவேரவில் இளவங்குடா கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு கடலட்டைபண்ணையாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கி வைத்தார்.

மேலும் இந்த நிகழ் வில் பூநகரி பிரதேச செயலாளர் அகிலன், பூநகரி பிரதேச செயலக மற்றும் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சேவல் சின்னத்தில் களமிறங்குகிறது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்?



உள்ளூராட்சித் தேர்தலில் சேவல் சின்னத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எவையும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

எனினும், இது தொடர்பில் எதிர்வரும் 17 ஆம் திகதி உத்தியோகபூர்வமான அறிவித்தல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# உயர்தரம் பிரத்தியேக வகுப்புகளுக்கு 17 ஆம் திகதி நள்ளிரவுக்கு பின் தடை!

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புகளை 17 ஆம் திகதி நள்ளிரவுக்கு பின்னர் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2023இல் வெளியிடப்பெற்றது.